

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கார்த்திகை - மார்கழி
டிசம்பர் - 2019

மலர் 8 இதழ் 12


பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆசிரியர் பக்கம் | 3 |
| கீதை பிறந்தது எதற்காக? | 7 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 10 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 12 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| திருக்குறள் நூற்றெட்டு | 16 |
| மார்கழி மாத விசேஷ தினங்கள் | 19 |
| முகாம் நிகழ்ச்சிகள் | 20 |
| தமிழ் பாகவதம் | 25 |
| ஸ்ரீ தேவி பாகவதம் | 27 |
| வாழ்வின் நான்கு நிலைகள் | 31 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரி - 19 | 33 |
| புராணக்கதை | 35 |
| வேதாந்த ஸாரம் | 37 |
| பித்ரார்ஜிதம் | 39 |
| மகாபாரத சுருக்கம் | 41 |
| ஜய தேவர் அருளிச் செய்த பஜகோவிந்தம் | 43 |
| விபூதியின் மகத்துவம் | 45 |
| கஷ்டமே வராம-ருக்க வழி | 46 |


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ N. சிவராமகிருஷ்ணன்
ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்
டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்
டாக்டர் G. சங்கரநாராயணன்









ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்



கௌரவ தலைமை ஆசிரியர் :
டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா
பேராசிரியர் ம.வே.பசுபதி
பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்



வெளியிடுவோர் :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்



அலுவலக முகவரி :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com


சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jaiganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ஆசிரியர் பக்கம்

பாரத நாடான நம் நாடு பாக்யம் பெற்றது. ஆன்மீகத்தின் கலங்கரை விளக்கமாக பல நெடுங்காலமாக விளங்கிவருகிறது. விஞ்ஞானத்திலும் இது சளைத்தது அல்ல என்பதை பல சாஸ்த்ரங்கள் மூலமாக அறிகிறோம். ஆன்மீகத்திலேயே பக்தித் துறை இன்னாட்டில் தான் சிறந்து விளங்குகிறது. ஸனாதன தர்மத்தின் ஆணிவேரான வேதங்கள் பக்திப் பாசுரங்களே. அதையொட்டி பல ப்ராந்திய மொழிகளிலும் பக்திப்பாடல்கள் நிறைய. அவைகளில் தமிழ் மொழியான நம் மொழியில் இருக்கும் பாடல்கள் மனதைக் கவ்வுகின்றன. உலகில் உள்ள மற்ற மதங்களில் பாடல்கள் இருந்தாலும் நம் நாட்டில் இருக்கும் அளவுக்கு ஆதிக்யமில்லை. அனுபூதிமான்கள் தோன்றி வளர்த்த பக்தி இலக்கியம் நம் இலக்கியம். ஆதிக்யமிருப்பதில் ஆச்சர்யமில்லை. தமிழ் நாட்டில் தோன்றிய சைவ குரவர்களும் வைணவ ஆழ்வாராதிகளும் தீந்தமிழில் பக்திச்சுவை நனி சொட்ட சொட்ட பகவானைப் பாடி அனுபவித்தனர். இதில் சற்று ஆழ்வாராதிகள் அருளிய திவ்யப்ரபந்தம் பற்றிப் பார்ப்போம்.

சிவனே பரம்பொருள் நாயன்மார்களுக்கு எனின் நாராயணனே பரம் பொருள் ஆழ்வார்களுக்கு. அதிலும் அர்சாவதாரத்திலும் அவதாரங்களிலும் ஆழ்ந்த பக்தி, அதைப் பாடுவதிலும் எளிமை, கம்பீரம். தெளிவு. சைவகுரவர்கள் நமசிவாய வாழ்க'' என்பர். ஆழ்வார்கள் ''கண்டு கொண்டேன் நாராயணா எனும் நாமம்'' என்பர். ஆரோக்யமான போட்டியில் நம் நாடு அத்புதமான பாசுரங்களை பெற்றது. சில பாசுரங்களைப் பார்ப்போம்.

முதலாழ்வார்கள் என்று சொல்லப்படும் பூதத்தாழ்வர், பேயாழ்வார், பொய்கை ஆழ்வார் என்பவர்கள் தொடங்கி வைத்தது தான் நாலாயிர திவ்யப்ரபந்தம் எனும் தமிழ் பக்தி வருக்ஷம். இவர்கள் போட்ட உரம் தான் மற்ற ஆழ்வார்களால் வளர்க்கப்பட்டு தீந்தமிழ் பாசுரங்களாய் மலர்ந்தன.

பொய்கையாழ்வார் பாடுகிறார்

வையம் தகளியாக வார்கடலே நெய்யாக
வெய்யகதிரோன் விளக்காக செய்ய
சுடராழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடர் ஆழி நீங்குகவே என்று'
இவர் சூட்டிய சொல்மாலையால் இடர்கள் போகவேண்டும் எனும்

பரந்த கொள்கையைக் காண்கிறோம்.

பூத்தாழ்வார் பாடுகிறார்.

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியாக நன்புருகி
ஞ்யானச்சுடர்விளக்கு ஏற்றினேன் நாரணற்கு
ஞ்யானத்தமிழ்புரிந்த நான்.

பக்தி எப்படி செய்யவேண்டும் என்று காண்பிக்கிறார் இவர். அந்தத் தெய்வம் எப்படி உள்ளது.

இதோ பேயாழ்வார் பாடுகிறார்.

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்
அருக்கன் அணி நிறமும் கண்டேன் செருக்கிளரும்
பொன் ஆழி கண்டேன் புரி சங்கம் கைகண்டேன்
என் ஆழி வண்ணன்பால் இன்று''

முதலிருவர் சொன்ன புருஷனை இதோ சங்கு சக்ரபாணியாக உள்ளவன் நாராயணன் என்னும் பரம்பொருள் எங்கிறார் மூன்றாமவர். இப்படி பல ஆழ்வார்கள் பலவிதமாக பகவானை அனுபவித்தனர். அதை மக்கள் பயனுற சொல்லிவைத்தனர். முதலாழ்வார்களை அடுத்து நம்மாழ்வார் எனும் பெரும் பக்தர் அந்த பரம்பொருளை இப்படிக் காட்டுகிறார்.

''உயர்வு அற உயர் நலமுடையவன் எவன் அவன்
மயர்வு அற மதி நலம் அருளின்ன் எவன் அவன்
அயர்வு அறும் அமர்கள் அதிபதி எவன் அவன்
துயர் அறு சுடர் அடி தொழுது எழு என் மனனே''

அவரே கேள்விகளைக் கேட்டு அவரே பதிலும் தருகிறார். மக்கள் துயர் அப்பரம்பொருளின் அடிகள்தான் தீர்க்கும் எங்கிறார். பகவானைப் பூஜிக்க பல மார்கங்கள், பல வித வழிமுறைகள், மூர்த்திபேதங்கள். இவையெல்லாம் ஒரு பரம்பொருளையேச் சேரும். கீதையில் பகவான் சொல்லியது போல் ஆழ்வார் பாடுகிறார்.

''அவரவர் தமதமது அறிவு அறி வகைவகை
அவரவர் இறையவர் எனஅடிஅடைவர்கள்
அவரவர் இறையவர் குறைவு இலர் இறையவர்
அவரவர் விதிவழி அடைய நின்றனரே ''

''யார் யார் எந்த தேவதையை உபாசிக்கிறார்களோ அந்த தெய்வத்தின் மீது பக்தியை நான் தருகிறேன்'' இது கீதாவாக்யம். அத்யாயம்7 ஸ்லோகம்21, 22. இப்படி இவர் அகம் கரைந்து பாடி உருகினார். மக்களுக்கு வழி காட்டினார். இதனால் என்ன பலன். அவர் கூறுகிறார்

''பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச்சாபம்
நலியும் நரகமும் நைந்த நமனுக்கு இங்கு யாதும் ஒன்றும் இல்லை
கலியும் கெடும் கண்டுகொண்மின் கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்
மலியப்புகுந்து இசை பாடி ஆடி உழிதரக் கண்டோம். ''

சாபமும் போகும் கலியும் கெடும் நரகமும் அடியார்க்கு இல்லை என்று ஆணித்தரமாகக் கூறுகிறார். அர்சாவதாரங்களை பாடி ஆழ்ந்து அனுபவித்து அருள் பாசுரங்களை தந்தவர் இவர். இவர் புகழ் சொல்லி மாளாது. அடுத்து எல்லாருக்கும் தெரிந்த ஆண்டாள் பெருமையைப் பார்ப்போம்.

இவள் பாடிய பாடலை அறியாதார் இருக்க முடியாது. திருப்பாவை அனேகமாக எல்லார் நாவிலும் நடம் புரியும். கண்ணனையே மணம் முடிக்க கனாக் காண்கிறாள். எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் தூயோமாய் வந்து உன்னை அடி பணிகிறோம், எங்கள்மீது கருணை கொள் என்று இறைஞ்சுவாள்.

பல்லாண்டு பாடியவர்கள். ராமபிரானையல்லால் கற்பதற்கு எதுவுமில்லை என்பவர், உண்ணும் சோறும் பருகும் நீரும் தின்னும் வெற்றிலையும் நாரணனே என்று கூறியவர்கள், நாரணனே ஓத்தின் சுருக்கு என்றவர்கள் படியாய் கிடந்து பவளவாய் காண்பவர்கள், இந்த்ரலோகத்துச் சுவை வேண்டேன் அர்ங்கத்து அம்மானின் அருட்சுவை ஒன்றே வேண்டுமென்றவர்கள் இவ்வடியார்கள். பெருமை சொல்லிலடங்கா.

இப்படி அர்சாவதாரத்தில் திளைத்து எழுந்தவர்கள் இவர்கள். விசிஷ்டாத்வைத சித்தாந்த்திற்கு தமிழுலகம் தந்த கொடை என்றால் மிகையில்லை. இவர்கள் வளர்த்த தமிழ் இன்றும் என்றும் வாழும் தமிழ் கூறும் நல்லுலகத்தை வாழ்விக்கும்.

மாக்ஸ்முல்லர்கூட Sacred books of the east எனும் தன் தொகுப்பில் தேவாரங்களையோ ப்ரபந்தங்களையோ ஏனோ சேர்க்கவில்லை. நம் நாட்டில் கூட ஏதோ அங்கங்கே முணுக் முணுக் என்று இவைகள் ப்ரசுரத்தில் இருக்கின்றனவே தவிர சிறார்கள் நாவில் எப்போதும் இடம்பெறவில்லை. இந்த அவலத்தை நாம் போக்கவேண்டும். பத்து பாசுரங்களையாவது பாட வைக்கவேண்டியது நம் கடமை. இப்படி நடக்க வேண்டுமென்று மகாபெரியவா 1008 பஜனை நடத்தி வழிகாட்டினார். அவ்வழியை நாமும் பின்பற்றுவோம் என்று கூறிக்கொண்டு இவ்விதழை ஸ்ரீசரணர்கள் பொற்பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

### சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது
கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

''ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,
ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய
ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்''

# கீதை பிறந்தது எதற்காக?

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ சங்கராசார்ய ஸ்வாமிகள்



70 - 71 ச்லோகங்களிலும் பூர்ணாத்மானுபவத்தைச் சொல்லி

एषा ब्राह्मी स्थितिः पार्थ नैनां प्राप्य विमुह्यति ।

स्थित्वाऽस्यामन्तकालेऽपि ब्रह्मनिर्वाणमृच्छति ।। (2. 72)

என்று அத்தியாயத்தை ஆரம்பித்தது போலவே ஞானபரமாய்ப் பூர்த்தி செய்கிறார். இந்த நிலை இன்று நமக்கு வந்துவிடவில்லையேயென்று கவலைப்பட வேண்டாம். மரண காலத்தில் அது கிடைத்தாலும் ப்ரும்ம நிர்வாணம் ஸித்திக்கிறது. ஆகையால் அந்த நிலைக்கு வேண்டிய ஸாதனமான ஸ்வதர்மத்தை ஒவ்வொருவரும் அனுஷ்டித்து வரவேண்டுமென்பதைக் குறிக்கத்தான் स्थित्वास्यामन्तकालेपि ब्रह्मनिर्वाणमृच्छति என்று பகவான் பூர்த்தி செய்கிறார். காளிதாஸன் योगेनान्तेतनुत्यजां எனும் சுலோகத்தால் இளமையில் கல்வியும், யௌவனத்தில் ஸ்வதர்மத்தை அனுசரித்த உலக வாழ்க்கையும், முதிய வயதில் தவமும் முறை தவறாது செய்தலானது மரண காலத்தில் யோகமென்னும் ப்ரும்ம நிலையில் நிற்க செய்கிறன்றது எனும் இதே கருத்தை வெளியிடுகிறார். பகவான் க்ஷத்ரிய குமாரனான அர்ஜுனனுக்கும் ஞான நிலையில் உண்மையையும், பெருமையையும் சொல்லிவிட்டு 'நீ உன்னிலையில் செய்ய வேண்டியது கர்மயோகம் தான்' என்று உபதேசிக்கிறார். கீதையின் இக்கருத்தையே காளிதாசன் வெகு சுலபமாக தனது காவ்யத்தின் ஆரம்பித்தில் முற்கூறிய ச்லோகத்தில் தொகுத்திருக்கிறார்.

சித்தத்தை அடக்குவதை விட பெரிய கார்யம் உலகத்திலில்லை. இரண்டு க்ஷணங்கள் கூட சித்தம் ஒரே நிலையில் நிற்பதில்லை. உள்ளே சித்தத்தை அடக்கப் பாடுபடுவதற்கு முன் வெளியுலகத்தில் பெரிய கார்யங்களை ஆசையற்று சாதிக்கும்படி சித்தத்தைப் பழக்கப்படுத்தினால் அந்தக் கார்யத்தின் அவசியத்திற்காக தானே ஒருமைப்படும் சித்தம் பின்னர் தவநிலையில் செல்லும் போது ஒரு நிலையிருக்கச் சுலபமாயிருக்கும். இதுவே கர்ம யோகத்தின் தத்வம். பக்தியுடன் ஒரு பெரிய கோபுரம் கட்டியவனே அதைவிடக் கஷ்டமாகயிருக்கும் சித்தத்தையடக்கும் காரியத்தில் செல்லத் தகுதியுள்ளவன். பற்றற்று பெரிய யுத்தத்தை ஜெயித்தவன் அல்லது பின்வாங்காது

மாண்டவன், அஷ்டாங்க யோகத்தினால் சித்தத்தைக் கட்டுப்படுத்தின யோகியின் நிலைக்குக் குறையாத நிலையுடையவன்.

द्वाविमौ पुरुषौ लोके सूर्यमण्डलभेदिनौ ।
परिव्राट् योगयुक्तश्र रणे च अभिमखो वृतः ।।

அர்ஜுனன் க்ஷத்ரியன். அவன் ஸ்வதர்மம் யுத்தம். அந்த ஸ்வதர்மத்தைக் கொண்டே ஞானத்தையடைய வேண்டியவன். அந்த ஞானமே யோகம். அதே ப்ராஹ்மீஸ்திதி, சோகத்திற்கு வியோக நிலை அதுவே. சோகத்தை அகற்றுவதே கீதையின் நோக்கம்.

सर्वं कर्माखिलं पार्थ ज्ञाने परिसमाप्यते । (4. 33) என்றும்
आरुरुक्षोर्मुनेर्योगं कर्म कारणमुच्यते ।
योगारूढस्य तस्यैव शमः कारणमुच्यते ।। (6. 3) என்றும்

கூறியிருக்கிறார். இந்த ச்லோகத்திலிருக்கும் யோகமென்னும் பதத்திற்கு த்யானயோகமென்று அர்த்தம். த்யான யோகம் ஸித்திக்க வேண்டும். மனம் ஒரு நிலைப்பட வேண்டும் என்ற தீவிர அவாவுடன் அதற்குப் பிரயத்தினம் செய்கிறவன் அந்நிலையெய்வதற்கு கர்மயோகமே அவனுக்கு சகாயம் செய்கிறது. அந்த சித்தத்தின் ஏகாக்ர நிலையை அடைந்த பின்னர் பூர்ண ப்ரும்ம நிலையை எய்துவதற்கு சமம் காரணமாகிறது. சித்தம் ஒரு நிலைப்படும் வரை கர்மயோகம், அதன் பின்பு ப்ரும்மாத்மானுபவம் ஏற்பட ஏகாந்த தவமோ, துறவறமோ சகாயம் செய்கிறது.

विविक्तदेशसेवित्वं अरतिः जनसंसदि ।। (13.11) முதலிய இவைகள் அப்பொழுது உபயோகப்படுகின்றன. ஞானம் வந்த நிலையில் எல்லாம் ஆத்மரூபமாக அனுபவிப்பதினால் நாம் கார்யம் ஏன் செய்ய வேண்டும்? என்று அர்ஜுனனுக்குத் தோன்றியிருந்தால் பகவான் அவனை இவ்வளவு கடுமையாக கடிந்திருக்க மாட்டார். புத்திமானுக்கு ஒருக்காலும் வரவே கூடாத சோகத்தின் காரணமாக அர்ஜுனன் யுத்தத்திலிருந்து பின்வாங்க எண்ணியதால் அவ்வெண்ணத்தை विषमेसमुपस्थितम् । 2.2 என்று பகவான் கடிந்தார். வரக்கூடாத சமயத்தில் வந்திருக்கும் எண்ணமிது. ஆகையால் இதைக் கச்மல மென்றார். சோகமென்னும் காரணமில்லாமல் "நான் ப்ரம்மாநுபவத்திலிருக்கிறேன் நான் ஏன் யுத்தம் செய்ய வேண்டும்" என்று அர்ஜுனன் சொல்லியிருந்தானானால்

இங்கு சமமென்னும் சொல் முன் சொல்லப்பட்ட கர்மமென்பதற்கு மாறுதலான ஒருபொருளை குறிக்கிறது. नैष्कर्म्यं पुरुषोश्नुते ।। 3.4 என்னுமிடத்தில் மக்களெல்லாம் ஒடுங்கிய நிலையான கைஷ் காம்யம் எனும் நிலை பகவானால் சொல்லப்படகிறது. அதே பொருளைக் கொண்ட அக்ரிய : 6.1. என்னும் சொல் துறவைக் குறிக்கிறது. அதனால் அக்ரியம், ஸக்யாஸம், சமம், நைஷ்கர்ம்யம், இந்நான்கு சொற்களும் கீதையில் ஒரே பொருளுடையவை.

लोकसंग्रहमेवापि संपश्यन् कर्तुमर्हसि ।। (3. 20) என்று மாத்திரம் பகாவன் பதில் சொல்லியிருப்பார். என்று கூட சொல்லியிருக்க மாட்டார். ஆகையால் நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் த்யான ப்யாஸம் செய்து கொண்டே வர வேண்டும். த்யானம் ஒரு முகமாக நிலைக்கும்படி செய்து கொள்வதைத் தவிர இந்த ஜன்மத்திற்குப் பெரிய காரியம் இல்லவேயில்லை. இந்த ஏகாக்ர நிலை ஸித்திப்பதற்கு நாம் சாஸ்திரத்தை அனுசரித்து சம்பாதிப்பதும், சாப்பிடுவதுமான கார்யத்தைத் தவிர நடப்பதுடன் ஸ்வதர்மத்தையொட்டின ஒரு பெரிய கார்யம் யதிருச்சையாக செய்ய நேரிடின், அந்த சந்தர்ப்பத்தை வெகு உத்சாஹத்துடன் உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும். பெரிய காரியத்தை எவ்வளவு கஷ்டப்பட்டாயினும் எத்தனை இடைஞ்சல் வந்தாலும் சலிக்காமல் பூர்த்தி செய்ய வேண்டும்.

அப்படி ஆசையற்று ஈச்வர பக்தியுடன் செய்யப்பட்ட ஸ்வதர்மத்தை யொட்டிய கர்ம யோகம் நமக்குத் தியானயோகத்தை நிலைக்கச் செய்யும். தியான யோகம் சித்தித்த பிறகு மானிடப் பிறவியின் முடிவான எல்லையாக கீதையின் இரண்டாவது அத்தியாயத்தின் இறுதியில் கூறப்பட்ட ப்ரும்ம நிர்வாணம் சுலபத்தில் சித்திக்கும், கீதையைப் படிக்கும் பாக்கியம் பெற்ற நாம் ஆடு மாடுகளைப் போல் வயிற்றுக்காகவே வாழ்வது இறுதி காலத்தில் அழுது துடித்துக் கொண்டு மரணத்தையடையக் கூடாது. அந்திய காலத்திற்குள் உண்மை நிலையில் அமர வேண்டும். அதுவே ஆனந்த நிலை எங்கும் என்றும் ஒன்றாக நிறைந்த நிலை.

सुखमात्यन्तिकं यत्द्बुद्धिग्राह्यमतीन्द्रियम्
वेत्ति यत्र न चैवायं स्थितश्चलति तत्वतः ।। 6. 21
यं लब्ध्वा चापरं लाभं मन्यते नाधिकं ततः ।
यस्मिन् स्थितो न दुः खेन गुरुणाऽपि विचाल्यते ।। 6. 22
तं विद्याद्दुः ख संयोगवियोगं योगसंज्ञितम् ।
स निश्चयेन योक्तव्यो योगोऽनिर्विण्णचेतसा ।। 6. 23

(தொடரும்)

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## நம்பிக்கை இழந்த நட்பு

***"நட்பு ஏற்றத்தாழ்வை உணராது. உயிரைவிட இதற்கு மதிப்பு அதிகம். பரஸ்பர நம்பிக்கை அதன் அஸ்திவாரம். அஸ்திவாரம் தகர்ந்தால் நட்பும் தகர்ந்துவிடும்"***



சேதிதேசத்தரசன் விஜயன் பக்கத்து நாட்டு அரசனின் குமாரியைத் திருமணம் புரிந்து கொண்டு தன் தலைநகர் வந்தான். அவனது வளர்ப்புக் கிளியான மாதுரி அவனை அந்தப்புர வாசலில் வரவேற்றது. விஜயனுக்கும், மாதுரிக்கும் இடையே இருந்த நட்பை புது மனைவியின் வரவும் அவளது அன்பும் சிறிதும் குறைக்கவில்லை. அரசகுமாரி ஒரு அழகான புதல்வனை ஈன்றாள். அன்றோ கிளியின் குஞ்சும், முட்டையிலிருந்து வெளி வந்தது. அரசனது மகிழ்ச்சிக்கோர் அளவில்லை.

மாதுரி தன் குஞ்சினுக்காக இரை தேடச் செல்லும் காட்டிலிருந்து இரு இனிய பழங்களை அது கொணரும். முதலில் அரசகுமாரனுக்கு ஒரு பழத்தின் ரசத்தை ஊட்டிவிட்ட பின்னரே தன் குஞ்சுவிற்கு உணவாக மற்றொன்றைத் தரும். அரச குழந்தை வளர, வளர அதற்கு கிளிக் குஞ்சு விளையாட்டுத் தோழனானது. ஒருநாள் கிளிக்குஞ்சுடன் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை திடீரென முரட்டுத் தனத்துடன் குஞ்சைப் பிடித்து அதன் இறக்கைகளைப் பிய்த்து அதன் கழுத்தை நெரித்துக் கொன்று விட்டது. அசையாமல் கீழே கிடக்கின்ற அதனைக் கண்டு கைகள் தட்டி ஆர்ப்பரித்து மகிழ்ந்தது. திடீரென நடந்த இந்த நிகழ்ச்சியால் அருகிலிருந்த தாதி தன் நிலை மறந்து விக்கித்து நின்றாள்.

இரை தேடச் சென்ற கிளி வழக்கம் போல் இரண்டு பழங்களைக் கொணர்ந்தது. ஒன்றை முதலில் அரச குமரனுக்கு ஊட்டியது. மற்றொன்றைத் தன் குஞ்சிடம்

கொடுக்கத் திரும்பிய அதன் கண்களில் உயிரற்று அலங்கோலமாகக் கிடந்த குஞ்சு தென்பட்டது. தாதி சுய உணர்வு பெற்று அரசகுமாரன் சிறு பிள்ளைத்தனத்தால் கிளியைக் கொன்று விட்டதை அலறலுடன் கூறினான். கிளிக்கு விபரம் தெரிந்தது. அன்பின் ஆழம் ஆத்திரத்திற்கு வித்தானது. பழத்தைச் சுவைத்துக் கொண்டிருந்த அரசகுமாரரின் இரு கண்களையும் குதறி வெளியே எடுத்தது. அலகால் கொத்தி எடுத்து கூரையின் மேல் உட்கார்ந்தது. தாதியின் புலம்பலும் குழந்தையின் கதறலும் கேட்ட அரசன் அங்கு வந்தான். நடந்ததை அறிந்த அவன் கிளியை உற்று நோக்கினான்.

“அரசே! நான் விடை பெறுகிறேன். இனி இங்கிருக்க எனக்குத் தகுதியில்லை” என்றது கிளி. “மாதுரி ! நீ செய்ததில் தவறில்லை. விதியின் தீர்ப்பு அது. இருவரும் மன்னிப்போம். மறப்போம் நீ என்னுடனேயே இருப்பாய் ” என்றான் அரசன்.

“விதியின் பேரில் பழியைப் போடாதீர். நட்பு பரஸ்பர நம்பிக்கையைச் சார்ந்தே வளர்கிறது. நம்பிக்கையென்ற உரமின்றி அது பட்டுப் போய்விடும். நீரும், நானும் நடந்ததை மறக்கலாம். நம் சந்ததியினரும் சூழ்ந்திருப்பவரும் மறக்க மாட்டார்கள். இதனை மன்னிக்க மாட்டார்கள். குரோதம் புகைந்து கொண்டேயிருந்து ஒருநாள் வெளிப்படும். மறுபடி நமது நட்பு சோதனைக் காலமாகலாம். அந்த சோதனையை நாம் இருவரும் தாங்க இயலாது. நான் வெளியேறுகிறேன். உங்கள் நட்பை என்றும் மறவேன் ” என்று கூறிக் கொண்டே கிளி பறந்து சென்றது.


அதே மரத்தின் கிளையில் அமர்ந்த கிளி கண்ணீருக்கிடையே மனக்கண்களால் அரசனைக் காண்கிறது. அரசனும் தன் உப்பரிகையில் கிளியை நினைந்துருகி மறுபடி அதனைக் காணும் ஏக்கம் வெளிப்பட அமர்ந்திருக்கிறான். ஆழ்ந்த நட்பு நினைவிலிருந்து அகலாது.

**கலை(ந்த)ச் சொற்கள்**
**டிசம்பர் வினாக்கள்**

1. ஸமககாவிகாதாளிர்
2. புபபரோராகாயண்ய்யா
3. மாதிவருலைளுவள்
4. தாஆத்ர்சருனராம்
5. தேவேந்தாதகசிர்

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



### அனுக்ரஹ பாஷணம் - திருக்கோவில் வழிபாட்டு குழு

''நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க''

சென்னையை அடுத்த பம்மலிலே அலுவகம் அமைந்துள்ள இந்த திருக்கோவில்கள் வழிபாட்டு குழு என்கிற அமைப்பானது, பெரியோர்களின் ஆசியுடன், துவங்கப்பட்டது, சிலவருடங்களுக்கு முன்பாக பல கிராம கோவிலுக்கும் பெரிவர்கள் (ஸ்ரீ ஜயேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகள்) விஜயம் செய்து இந்த இயக்கத்தை, இந்த நல்ல பணிகளை ஊக்குவித்து, அவருடைய ஆசை வாயிலாக, இன்று பல நூறு கோவில்களுக்கும் பக்தர்களால் இயன்ற சேவைகளை, அது தீபங்களுக்காக எண்ணெய் அளிப்பதாக இருக்கட்டும் அல்லது மேற்கூரை இல்லாத கோவில்களுக்கு நிழலை அளிக்க கூடிய, தற்காலிக மண்டபங்களாக இருக்கட்டும், சிறிய உதவிகளைக்கொண்டு செய்யக்கூடிய கும்பாபிஷேகமாக இருக்கட்டும்- ஊர் பொது மக்களின் உதவியோடு செய்யக்கூடிய பிரதோஷ வழிபாடு முறையாக இருக்கட்டும், நகரத்தில் இருக்க கூடிய பஜனை குழுக்கள், பிரசங்கம் செய்பவர்கள் இவர்களை அழைத்து வந்து உபன்யாசங்கள் ஏற்பாடு செய்து, சொற்ப்பொழிவுகளை ஏற்பாடு செய்து, பக்தியை வளர்க்க கூடிய ஆன்மீக நிகழ்ச்சியாக இருக்கட்டும், இப்படி பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு, பல விதமான ஆன்மீகத் தேவைகளை, பொது மக்களின் ஒத்துழைப்போடு, பெரியவர்களுடைய ஆசியோடு, இந்த திருக்கோவில் வழிபாட்டு குழுவானது, பம்மல் சத்சங்கத்தை அமைத்து, பம்மல் விஸ்வநாதனுடைய முயற்சியிலேயும், இதை, இந்தப் பணியை சிரமம் மேற்கொண்டு, கிராமம் கிராமமாக சென்று, பொது மக்களுடன் கலந்து பேசி, அந்த பொது மக்களின் தேவைகளை உணர்ந்து, அவர்களை ஈடுபடுத்திய கண்ணன் அவர்களின் குழுவினரின்மூலமாக இந்த பணியானது

சிறப்பாக நடந்து வருகிறது. பல்லாயிரக்கணக்கான திருக்கோவில்கள் தமிழ்நாட்டில் அமைந்து இருக்கின்றன. இது தமிழ்நாட்டிற்கு விசேஷமாக ஏற்பட்ட சிறப்பு. இப்பொழுது சிறியதும் பெரியதுமாய் இருக்கின்ற பலகோவில்கள் இன்றைக்கு அமைந்த கோவில்கள் அல்ல. இரண்டாயிரம் வருஷங்களாக, ஆயிரத்து ஐநூறு வருஷங்களாக, ஆயிரம் வருஷங்களாக, எழுநூறு வருஷங்களாக, இப்படி சர்வ சாதாரணமாக ஐநூறு வருஷத்திற்கு மேற்பட்ட கோவில்கள் தமிழ் நாட்டில் பல அமைந்துள்ளன.

அந்தக் கோவில்களை எல்லாம் எதற்காக அமைத்தார்கள்? பக்தியை வளர்க்க வேண்டும், மனிதனுடைய மனதிலே நல்ல எண்ணங்களை வளர்க்க வேண்டும், பொது சேவை என்ற உணர்வைவளர்க்க வேண்டும் என்பதற்காக. நம்முடைய தர்ம சாஸ்திரங்களிலே, நீதி நூல்களிலே சொல்லப்பட்டுள்ளகருத்துக்கள், மக்களுக்கு சென்றடைவதற்காகவும் உருவாக்கப்பட்டவை இவை. தனி மனிதனால்ஆகம சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கும்நீதிஉரைகளைநியமங்களுடன், அதற்குரிய பழக்க வழக்கங்களுடன்செய்வது கடினம் என்பதனாலே, பொது மக்களுக்கும் அந்த கிராமத்திலே இருக்க கூடிய அனைத்து உயிரனங்களுக்கும் நன்மை உண்டாக்குவதற்காக, இறைவனிடம் விண்ணப்பம் செய்யக் கூடிய, பிரார்த்தனை செய்யக் கூடிய, ஒரு சக்தி படைத்த ஆலயத்தை அமைத்தார்கள், அந்த இடத்திலே தினமும் சாஸ்திரம் சொன்ன விதத்திலே, கோவில் திறக்கப் பட்டு, சுப்ரபாதம், கோ பூஜையில் இருந்து ஆரம்பித்து, காலைஅபிஷேகம், மதியம் அபிஷேகம், மாலை நேர பூஜைகள், இரவு அர்த்த ஜாம பூஜை என்பதாகஎந்த ஊரில் எந்த அளவு சாத்தியமோ, அந்தளவுக்கு தினசரி பூஜைகளை நடத்தினார்கள்.

இவ்வாறு கட்டிய கோவில்களை சாத்திரப்படி கட்டினார்கள். சிற்ப சாஸ்திரப்படி வாசற்படி வைத்து, அர்த்த மண்டபம், மகா மண்டபம், கோபுரங்கள்இப்படி எல்லாம் சாஸ்திரத்தின் படி, அந்த கோவில்களை நிர்மாணம் செய்து, திருக்குளங்களை அமைத்து, ஊரணிகளை அமைத்து, எந்தெந்த ஊரில் முடியுமோ, அந்தந்த ஊரில் எல்லாம் சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய, மரத்தினால் ஆன தேர்களை அமைத்து, சில ஊர்களிலே பிரம்மோத்சவம், திருவிழா, பத்து நாட்கள் நடப்பதற்காக, அதிகார நந்தி, அறுபத்தி மூவர், கருட சேவை, இப்படியாக பல வாகனங்களை அமைத்து, இந்து சமயத்தை பொது மக்களுக்கு விளக்க கூடியதாக, இந்து சமயங்களின் சிறப்புகளை தெரிந்து கொள்ளும் கல்வி நிலையங்களாக, பக்தியை வளர்க்க கூடிய, கலைகளை பரப்பக்கூடிய, பிரசார கேந்திரங்களாக, பிறருக்கு உணவிட்டு நாம் சாப்பிட

வேண்டும் என்ற உயர்ந்த தயாள குணம் கொண்ட அன்னதானம் உள்ளிட்ட சிந்தனைகள, தர்மங்களை உருவாக்க கூடிய ஊற்றாக, இந்த கோவில்களை அமைத்து, மனித சமுதாயம் நலம் பெற வேண்டும், மனித நாகரீகம் வளர வேண்டும், மனிதர்களுடைய மனதிலே தர்ம சிந்தனை வளர வேண்டும், அதன் மூலம் ஒழுக்கமும், அன்பும் வளர வேண்டும். இவ்வாறாக பல நோக்கங்களுடனே கோயில்கள் கட்டப்பட்டுள்ளன.

கோவில் சென்று வருவதனால் பக்தி வளர்கிறது. சமுதாய சிந்தனை வளர்கிறது. சேவை மனப்பான்மை வளர்கிறது. நம்முடன் தெரிந்தோ தெரியாமலோ இருக்க கூடிய அகங்காரம் குறைகிறது. குறுகிய மனப்பான்மையிலே இருந்து நமது மனது மாறிபரந்த மனப்பான்மை வருகிறது, அகலப் பார்வை என்று நாம் சொல்கிறோமே அது ஆலயங்களின் மூலமாகவேவளர்கிறது.

இன்றைக்கு நாம் என்னவெல்லாம்தொழில்நுட்பத்தில் சொல்லி வருகிறோமோ-நீரை சேகரிக்க வேண்டும், நிழலை உருவாக்க வேண்டும், மரங்களை நட வேண்டும், என்றெல்லாம் விஞ்ஞான ரீதியாக, எந்த கருத்தை வலியுறுத்திசொல்லி வருகிறார்களோ, இதற்கெல்லாம் முன்னோடியாக கோயில்களில் தெப்போற்சவங்களை நடத்தி, குளங்களை பராமரித்து, நல்ல மரங்களை, ஸ்தல வ்ருக்ஷங்களை பராமரித்தார்கள். இந்த தூய்மையான காற்று, தூய்மையானகுடிநீர், நிலத்தடி நீருக்காக இன்று நாம் இன்னமும் முயற்சி செய்து கொண்டு இருக்கிறோம்.

இதெல்லாம் உணர்ந்து, இந்த கோவில்களை நல்ல முறையிலே கட்டி, ஆலயம் தொழுவது சாலவும் நன்று, கோவில் இல்லா ஊரிலே குடி இருக்க வேண்டாம் என்கிற முதுமொழிகளுக்கு ஏற்ப, ஒரு கிராமத்தின் முன்னேற்றத்திற்கு மையமாக, பிரதானமாக, இந்த கோவில்களை அமைத்து இருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட கோவில்களை, அமைப்பதோடு நின்று விடாமல்பெரிய கோவிலாக இருந்தால், நூற்றுகணக்கான ஏக்கர் நிலங்கள் சின்ன கோவில்கள் இருந்தாலும், ஐந்தாறு ஏக்கர் நிலமாவது-அன்று இருந்த பொருளாதார அடிப்படையில் அந்த நிலங்களை தானமாக, தர்மமாக எழுதி வைத்து, கோவிலில் நித்திய பூஜை நடை பெற வேண்டும், கோவிலில் திருவிழாக்கள், உற்சவங்கள் நடை பெற வேண்டும், வேத பாராயணங்கள் நடை பெற வேண்டும், அன்னதானங்கள் நடை பெற வேண்டும், இதெல்லாம்தர்ம காரியங்கள் நடைபெறுவதற்காக நிபந்தங்கள் என்று பெயர் (Endowment) அதாவது நிபந்தனைகள் அல்ல, நிபந்தம். நிபந்தம் என்றால்,

இந்த வேலைக்காக இந்த நிலத்தை உபயோகப்படுத்த வேண்டும். அந்த கோவிலிலே நாதஸ்வர இன்னிசை முழங்க வேண்டும், இப்படி எல்லாம் சொல்லி, கோ சாலை அமைக்க வேண்டும், இப்படி பல் வேறு தர்மங்களுக்காக, நல்ஆள்விளைவு, இத்தனைலிட்டர் எண்ணெய் வைப்பது என்று சொல்லி கொண்டு உள்ளார். இன்னும் தேவை என்று சொல்லிக் கொண்டு உள்ளார். அந்த அகண்ட தீபம் எறிவதற்காக-நல ஆள்விளைவு-இங்கே ஒரு கல் வெட்டு இருக்கிறது.இருபத்தி நான்கு ஆடுகள் கொடுத்தார்கள், தீபம் ஏற்றி வைப்பதற்காக, இதெல்லாம் எழுதி இருக்கார்கள். இப்படி தர்மங்கள் நடை பெறுவதற்காக, கோவிலுக்குசொத்துக்களையும்ஏற்பாடு செய்தார்கள். நகைகளும் ஏற்பாடு செய்தார்கள். இப்படி வளமான கோவில்களாக இந்த கோவில்களை வைத்தார்கள்.

(தொடரும்)


**"ஸ்ம்ருதி முக்தாபலம்" என்னும் வைத்தியநாத தீக்ஷிதீயம்**

அரிய தர்மசாஸ்திர புத்தகத் தொகுப்பு எளிய தமிழ் உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது.
1.வர்ணாஸ்ரம தர்மகாண்டம், 2.ஆஹ்னிககாண்டம் பூர்வபாகம், 3.ஆஹ்னிககாண்டம் உத்தரபாகம் ,
4.ஆசௌசகாண்டம், 5.ஸ்ராத்தகாண்டம் பூர்வபாகம், 6.ஸ்ராத்தகாண்டம் உத்தரபாகம்,
7.திதிநிர்ணயகாண்டமும் ப்ராயச்சித்தகாண்டமும் என்ற 7 பாகங்கள்சேர்த்து மிகக்குறைந்த விலையில் கிடைக்கப்பெறுகின்றது.ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் வாங்கி பயன் பெறலாம்.



ஏழு தொகுதிகள் அடங்கிய ஒரு செட் விலை 2500
கூரியர் தபாலில் பெற மேலும் 500 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்
தொடர்பு கொள்ளவேண்டிய அலைபேசி எண்கள்
9600543996,7904244054, 9003845456,9710765203


**குறிப்பு :**

**இந்தத் தொகுப்பு ஸ்ரீ மடம் புக் ஸ்டால் மற்றும்**
**ஸ்ரீ பெரியவாள் முகாமிலும் கிடைக்கும்**



# திருக்குறள் நூற்றெட்டு

ப்ரதீபப் பேழை

திருக்குறளிலிருந்து தொகுக்கப்பட்டது.
ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான
ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்
அனுக்ரஹித்த திவ்ய ஸ்ரீமுகத்துடன் கூடியது.

## 103. இமையாரின் வாழினும் பாடிலரே இல்லாள்
## அமையார்தோ ளஞ்சு பவர்

*இல்லாள் - அமை - ஆர் - தோள் - அஞ்சுபவர் = மூங்கில்போல் அழகுற்ற மனைவியின் தோள் காரணமாக அவளிடம் பயப்படுவார். இமையாரின் = கண்ணிமைத்தல் இல்லாத தேவர்களைப் போல், வாழினும் = வாழ்ந்தாலும், பாடு = சிறப்பினை இலர் = உடையாரல்லர். ஏ = அசை.*

*ஈண்டுத் தேவர்கள் கண்ணிமைப்பது இல்லை என்பது இமையார் என்ற சொல்லால் குறிக்கப்பட்டது.*

*தன் மனையாளிடத்திலும், காமத்தில் மூழ்கிக் கிடத்தல் தவறு என்பது அறியப்படுகிறது.,*

## 104. இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறும்
## திருநீக்கப் பட்டார் தொடர்பு

*இரு மனப் பெண்டிரும் = கணிகையரும், கள்ளும், கவறும் - சூதாட்டமும், திருநீக்கப்பட்டார் - லக்ஷ்மீ கடாக்ஷம் நீங்கியவர்களின் தொடர்பு ஆகும்.*

*ஸ்த்ரீகள், சூதாட்டம், வேட்டை, பானம், இந்நான்கும் காமத்தால் உண்டாகும் நால்வகைத் துன்பங்கள். அவற்றால் மனிதன் செல்வத்தை இழக்கிறான். ஸத்ரியன் அக்ஷா - ம்ருதயி - பானம் - ஏதத் - காம - ச துஷ்டயம் - ப்ரோக்தம் - யை... என்னும் மகாபாரதம் வனபர்வம் 13வது அத்யாயம் 7வது ஸ்லோகம் கூறும். இக்கருத்தையே சத்வாரி ஆஹஜ - நர...என்னும் சபாபர்வம் 90 வது அத்யாயம் 20, 21 வது சுலோகங்களும் பானம் - .... என்னும் சாந்தி பர்வம் 140வது அத்யாயம் 26வது சுலோகமும், அர்த்தசாஸ்த்ர 119 வாக்யமும் கூறும்.*

பானம் - அக்ஷா - ஸ்த்ரிய - ச - ஏவ ... என்று கூறுகிறது மனுஸ்ம்ருதி 7வது அத்யாயம் 50வது சுலோகம்.

லக்ஷ்மீ கடாக்ஷம் வேண்டுபவன் இவைகளில் ஈடுபடுதல் தகாது என்பது கருத்து.

## 105. தேவ ரனையர் கயவ ரவருந்தாம்
## மேவன செய்தொழுது லான்

கயவர் = இழிந்த, ஆசாரமுடையோர் தாம் மேவன = விரும்பிய பொருள்களை, செய்து ஒழுகலான் தேவரனையர் = தேவர்களை ஒப்பர்.

தேவர்கள் சுயநன்மையையே கருதுமாறு கயவர் சுயநலத்திற்காக நினைத்தபடி யெல்லாம் அக்ரமம் செய்வர் என்பது குறிப்பு.

## 106. அச்சமே கீழ்கள தாசார மெச்சம்
## அவாவுண்டே லுண்டாஞ் சிறிது

கீழ்களது = இழிந்தோருடைய, ஆசாரம் = செயல்கள், அச்சமே அச்சத்தையே காரணமாகக் கொண்டன. எச்சம் = அவற்றைத் தவிர்த்து ஏனைய செயல்கள், அவா = விருப்பம், உண்டேல் = இருப்பின் சிறிது = உண்டாம்.

செய்யாவிடின் தண்டிப்பார்கள் என நினைத்து இழிந்தோர் தாங்கள் செய்யவேண்டியவற்றை செய்கிறார்களேயன்றி விருப்பத்துடன் அவற்றை அவர்கள் செய்யவில்லை என்பது கருத்து.

தத்தம் வர்ண தர்மங்களையும், ஆச்ரம தர்மங்களையும் செய்யாது இழிந்த நிலையில் உள்ளோரையே கீழ்கள் என்ற சொல்லால் ஆசிரியர் குறிக்கின்றனர். அவர்களிடம் தமக்குள்ள வெறுப்பபைக் கீழ்கள் என்ற விடத்து அஃறிணைவிகுதியாகிய கள் என்பதால் அறிவிக்கின்றனர்.

ஸர்வ .... என்று கூறுகின்றனர். மனுஸ்மிருதி 7வது அத்தியாயம் 22வது சுலோகமும் மகாபாரதம் சாந்திபர்வம் 15வது அத்தியாயம் 34வது சுலோகமும்

## 107. தாம் வீழ்வார் மென்றோட் டுயிலினி னிது கொல்
## தாமரை க்கண்ணா னுலகு

தாம் = வீழ்வார் மென்றோட்டுயிலின் = தாம் விரும்பும் மகளின் மெல்லிய தோளின்கண்

துயில் போல, இனிது கொல் = வருந்தாமல் எய்தலாமோ, தாமரைக் கண்ணா னுலகு = செங்கண் மானுலகம்.

ஆகையால் ஏந்திய கொள்கையரும் அரசரும் சேர்ந்து நாட்டை ஆளவேண்டுமென்பது அறியத்தக்கது. ஏந்திய கொள்கையரை யஸீஸருத: என்ற சொல்லால் சாஸ்த்ரம் குறிக்கும்.

தாமரைக் கண்ணாள் என்பதற்குத் தாமரையைப் போன்ற கண்களையுடையவன் எனப் பொருள் கொண்டு அச்சொல் திருமாலைக் குறிக்கின்றது என்று கொள்ளப்பட்டது. தாமரை என்பதற்குப் பதுமம் என்ற (அற்புதம், அப்ஜம் என்ற சங்க்யையுள் கூறப்பட்ட) பேரெண்ணைப் பொருளாகக் கொண்டு அச்சொல் இந்திரனைக் குறிக்குமென்பாரும் உளர். மலர்மிசை ஏகினாள் என்ற சொல்லை நோக்கின் அச்சொல் ப்ரம்மாவைக் குறிக்கின்றது என்று சொல்வாரும் உளர்.

நீவி - மோக்ஷ - ஹி - மோக்ஷ என்கிறார் பர்த்ருஹரி = ச்ருங்கார சதகத்தில்

## 108. புலத்தலிற் புத்தேணா டுண்டோ நிலத்தொடு நீரியைக் தன்னா ரகத்து

நிலத்தொரு, நீர், இயைந் தன்னாரகத்து - யைந்த தன்மையையுடைய, காதலரிடத்தில், புலத்தலின் = புலத்தலைக் காட்டிலும், இனிது = மிக்க இன்பத்தை தருவது, காட்டிலும், இனிது = மிக்க இன்பத்தை தருவது, புத்தேணா - தேவருலகம் உண்டோ?

ஸ்வர்கத்தில் அமையும் இன்பத்தைக் காட்டிலும் ஒத்த அன்பினையும், பிறர்மனை நோக்காச் சிறப்பினையுங் கொண்ட கணவரோடு ப்ரணயகலகஞ் செய்தலால் வரும் இன்பம் சிறந்தது என்பது குறிப்பு.

தம்பதிகட்கு ஸௌமனஸ்யம் வேண்டும் என ருதுவேதம் கூறுகிறது. அதனையே பலவிடத்துத் தொகுத்தும் விரித்துங் கூறி, அதற்கு உதாரணமாக அர்த்தநாரீசுவரரைத் தான் உபாஸ்ய தெய்வமாகக் காளிதாஸன் ... என்னுமிடங்களில் தொழுவதையும் மக்கள் நோக்குதல் தகும்.

இவ்வாசிரியரின் சமயம் வைதிக சமயமும், உபாஸனா மூர்த்தி வாமன மூர்த்தியும், தத்வநிலை அத்வைதானு பவமும் என்பது தெளிவாகிறது.

**திருக்குறள் நூற்றெட்டு முற்றிற்று**

# மார்கழி மாத ஸ்ரீமடத்தின் விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விவரம் |
|---|---|---|
| 17/12/19 | செவ்வாய் | தனுர் மாத பூஜாரம்பம் |
| 22/12/19 | ஞாயிறு | ஏகாதசி |
| 23/12/19 | திங்கள் | துவாதசி |
| 23/12/19 | திங்கள் | காஞ்சி பரமகுரு ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர சரஸ்வதி மஹாஸ்வாமிகள் ஆராதனை |
| 23/12/19 | திங்கள் | ப்ரதோஷபூஜை |
| 23/12/19 | திங்கள் | அனுஷம்தேர் |
| 24/12/19 | செவ்வாய் | அனுஷம்பாராயணம் |
| 25/12/19 | புதன் | மூலம்தேர் |
| 28/12/19 | சனி | உத்ராடம்தேர் |
| 28/12/19 | சனி | உத்ராடம்பாராயணம் |
| 30/12/19 | திங்கள் | அவிட்டம்தேர் |
| 30/12/19 | திங்கள் | அவிட்டம்பாராயணம் |
| 06/01/20 | திங்கள் | வைகுண்டஏகாதசி |
| 07/01/20 | செவ்வாய் | துவாதசி |
| 08/01/20 | புதன் | ப்ரதோஷபூஜை |
| 10/01/20 | வெள்ளி | பௌர்ணமிபூஜை, ஆருத்ராதரிசனம் |
| 14/01/20 | செவ்வாய் | போகிபண்டிகை |
| 15/01/20 | புதன் | பொங்கல் பண்டிகை, உத்தராயண புன்யகாலம் |
| 20/12/19, 27/12/19, 03/01/20 - 10/01/20 வெள்ளிக்கிழமைபூஜை | | |

# ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளின் முகாம் நிகழ்ச்சிகள்

தொடர்ச்சி..

*27.10.19 அன்று திருவானைக்காவல் ஸ்ரீமடம் முகாமில் வழக்கம்போல் சிறப்பாக தீபாவளி பண்டிகை கொண்டாடப்பட்டது. வந்திருந்த பக்தர்களுக்கு ஸ்ரீ பெரியவாள் ப்ரஸாதம் வழங்கினார்கள். அன்று மாலை அல்லூர் கிராமத்திற்குச் சென்ற ஸ்ரீ பெரியவாள் அங்குள்ள பாடசாலை மாணவர்களிடையே அனுக்ரஹ பாஷணம் வழங்கினார்கள்.*

*28.10.19 அன்று மாலை முசிறி அருகே உள்ள மஹேந்த்ரமங்கலம் கிராமத்திற்கு விஜயம் செய்தார்கள். சிவன் கோவில் எதிரே ஸ்ரீ பெரியவாளுக்கு பூர்ணகும்ப மரியாதைகளுடன் திரளான பக்தர்கள் வரவேற்றார்கள். பிறகு ஆதிசங்கரர் கோவில், சிவன் கோவில், பெருமாள் கோவில், ஸ்ரீரங்கன் ஐயங்கார் ட்ரஸ்ட், ஸ்ரீமடத்தின் வேதபாடசாலை,ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அய்யர் இல்லம், பஜனை மடம் மற்றும் சமீபத்தில் ஸ்ரீமடம் வாங்கியுள்ள க்ருஹம் ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்தார்கள். கிராமத்துக் குழந்தைகளுக்கு நோட்டுப்புத்தகம், பேனா ஆகியவை வழங்கினார்கள். இந்த மஹேந்த்ர மங்கலம் கிராமத்தில்தான் ஸ்ரீமஹாஸ்வாமிகள் மூன்று வருடங்களுக்கும் மேலாக தங்கியிருந்து வேதசாஸ்திரங்கள் பயின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பவும் நமது குழந்தைகளுக்கு மஹேந்த்ரமங்கலத்தில் அக்ஷராப்யாஸம் செய்வித்தால் சிறப்புடன் திகழ்வார்கள். மஹேந்த்ரமங்கலத்திலிருந்து திரும்பம் வழியில் குணசீலம் ஸ்ரீ ப்ரஸன்ன வெங்கடேச ஸ்வாமி திருக்கோயிலில் தர்சனம் செய்து கொண்டு இரவு 10 மணியளவில் திருவானைக்காவல் திரும்பினார்கள்.*

*29.10.19 செவ்வாய்கிழமை முகாம் திருவானைக்காவலிலிருந்து புறப்பட்டு மதுரை அருகேயுள்ள தேனூர் கிராமத்தில் சுப்ரஜா வளாகத்திற்கு வந்து சேர்ந்தது. வழியில் ஸ்ரீ பெரியவாள் அவர்கள் திண்டுக்கல் அருகில் விரக்கல் கிராமத்தில் ஸ்ரீ காந்திராஜன், முன்னார் சபாநாயகர் அவர்களின் முயற்சியால் கட்டப்பட்டுள்ள ஸ்ரீ சௌடாம்பிகா அம்மன் கோவிலுக்கு விஜயம் செய்தார்கள்.*

*30.10.19 அன்று தென்கரை கிராமம் மற்றும் சோழவந்தான் அக்ரஹாரம் ஆகியவிற்றிற்கு ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் விஜயம் செய்து அங்கு திரண்டிருந்த பக்தர்களுக்கு தர்சனம் வழங்கினார்கள்.*

31.10.19 அன்று முகாம் தேனூரிலிருந்து புறப்பட்டு இரவு திருப்புடைமருதூர் வந்து சேர்ந்தது. இந்த தேனூர் முகாமிற்கான ஏற்பாடுகளை அக்ரிணிஸ்ரீ சீதாராமன் அவர்கள் சிறப்பாக செய்திருந்தார்கள்.

31.10.19 மாலை திருப்புடைமருதூர் செல்லும் வழியில் கயத்தாறு கிராமத்தில் (சிவார்ப்பணம் டிரஸ்ட்) ஸ்ரீ சந்த்ரமௌலி ஆடிட்டர் நடத்தும் திறந்தவெளி கோசாலையை பார்வையிட்டார்கள். 250க்கும் மேற்பட்ட பசுக்கள் பராமரிக்கப்படுகின்றன. பின்னர் அங்கிருந்து புறப்பட்டு கோவில்பட்டியில் உள்ள நேஷனல் காலேஜ் சென்றார்கள்.

01.11.19 முதல் 06.11.19 வரை திருப்புடைமருதூரில் பூஜை. முகாம் ஏற்பாடுகளை திருநெல்வேலி ஸ்ரீ ஜயேந்த்ரன் மணி மற்றும் ஸ்ரீமதி. உஷா ராமன் சிறப்பாக செய்திருந்தார்கள். பூஜைக்குத் தேவையான தீர்த்தத்திற்காக புதிதாக ஒரு கிணறு வெட்டப்பட்டது மிகவும் சிறப்பானது.

இந்த ஆறு நாட்களில் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள் :

1. 01.11.19அன்று மாலை திருநெல்வேலி குறுக்குத்துறையில் ஸ்ரீமதி மஹாலக்ஷ்மி சுப்ரமண்யம் ஏற்பாடு செய்திருந்த தாமிரபரணி புஷ்கர பூர்த்தி விழா

2. 03.11.19 அன்று திருநெல்வேலி தைப்பூசப் படித்துறையில் ஸ்ரீமதி உஷாராமன் ஏற்பாடு செய்திருந்த தாமிரபரணி புஷ்கர பூர்த்தி விழா.

3. 04.11.19 அன்று திருப்புடைமருதூர் தாமிரபரணி கூடுதுறையில் தாமிரபரணி தீர்த்த பூஜை மற்றும் ஆரத்தி விழா

4. 05.11.19 அன்று மாலை திருநெல்வேலி மஹராஜ நகர் ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் வெள்ளி விழா பள்ளிக்கு விஜயம்.

5. அன்று இரவு கல்லிடைக்குறிச்சி, அம்பாசமுத்ரம், ப்ரம்மதேசம் ஆகிய கிராமங்களுக்கு விஜயம்.

6. 06.11.19 அன்று மாலை திருநெல்வேலி சங்கர நகரில் அமைந்துள்ள ஸ்ரீ ஜெயேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகள் பொன்விழா பள்ளியில் நடந்த சிறப்பு நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள்.

7. இது தவிர தாமிரபரணி புஷ்கரத்தை முன்னிட்டு அருள்மிகு கோமதியம்மன் சமேத ஸ்ரீ நாறும்பூநாதர் திருக்கோயிலில் ஏகாதச ருத்ரம், சிறப்பு ஹோமங்கள் சிவாச்சார்யார்களால் நடைபெற்றது. இறுதிநாளான 06.11.19 அன்று அந்த கலசங்களை கொண்டு தாமிரபரணி நதியில் ஸ்ரீ ஆசார்யாளுக்கு அபிஷேகம் செய்யப்பட்டது.

06.11.19 அன்று மூன்று கால பூஜைகளை முடித்துக்கொண்டு திருப்புடைமருதூரிலிருந்து கிளம்பிய ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள் வழியில் சங்கர் நகர் பள்ளிக்கு சென்று விட்டு தேனூர் வரும் வழியில் இரவு 10.00 மணி அளவில் மதுரை சொக்கிக்குளம் ஸ்ரீ சங்கரமடத்திற்கு விஜயம் செய்தார்கள். பல வருடங்களுக்குப் பிறகு மதுரை வரும் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளுக்கு மதுரைவாழ் பக்தர்களால் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

07.11.19 அன்று மூன்று கால பூஜையும் சமயநல்லூர் அருகே உள்ள தேனூர் கிராமத்தில் சுப்ரஜா வளாகத்தில் முடித்துக்கொண்டு அங்கிருந்து புறப்பட்ட ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் மதுரை வைதீக சமாஜத்தில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்று அங்கிருந்து திருவானைக்காவல் புறப்பட்டார்கள்.

08.11.19 முதல் 10.11.19 வரை மூன்று நாட்கள் திருவானைக்காவல் வடக்கு வீதியில் உள்ள ஸ்ரீ ஜகத்குருவித்யாஸ்தானத்தில் ஸ்ரீ சந்த்ரமௌலீச்வரர் பூஜை நடந்தது. 09.11.19 அன்று ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாதஸ்வாமி ஆலயத்தில் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளுக்கு திருக்கோயில் மரியாதை அளிக்கப்பட்டது. ரங்கா கோபுரம் வாயிலில் கோயில் செயல் அலுவலர் திரு ஜெயராமன் அவர்கள் தலைமையில் கோவில் பட்டாச்சார்யர்கள் பாரம்பரியான பூர்ணகும்ப மரியாதையை வழங்கினார்கள். அடுத்து த்வஜஸ்தம்பம் அருகே சடாரி மரியாதை பிறகு ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீ ரங்கநாதர் மற்றும் ரங்கநாயகி தாயாரை தரிசனம் செய்தார்கள். கோயில் பட்டாச்சார்யர்கள், பரிசாரகர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு ஸ்ரீமடம் சார்பில் சன்மானம் அளிக்கப்பட்டது.

10.11.19 அன்று மாலை திருவானைக்காவலிலிருந்து ஸ்ரீமடம் முகாம் புறப்பட்டு இரவு 8.00 மணியளவில் ஜெயங்கொண்டம் அருகேயுள்ள கங்கை கொண்ட சோழபுரம் வந்தடைந்தது.

11.11.19 அன்று மாலை ஸ்ரீ ப்ருஹதீஸ்வரர் கோயிலில் நடைபெற்ற அன்னாபிஷேகத்தில் ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள் பங்கேற்று ஸ்வாமி தர்சனம் செய்தார்கள். மாவட்ட ஆட்சியர், காவல்துறை கண்காணிப்பாளர் உட்பட பல அதிகாரிகள் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் வரவேற்று அவர்களுடன் ஸ்வாமி தர்சனம் செய்தனர்.

*12.11.19 அன்று ஸ்ரீ சந்த்ரமௌலீச்வர ஸ்வாமிக்கு ஸ்ரீமடம் முகாமில் அன்னாபிஷேகம் நடைபெற்றது. உள்ளூர் வாசிகள் பலரும் பூஜையில் கலந்து கொண்டனர். கங்கைகொண்டசோழபுரம் முகாமிற்கான ஏற்பாடுகளை ஸ்ரீ காஞ்சி காமகோடி பீட அன்னாபிஷேக கமிட்டியைச் சேர்ந்த ஸ்ரீ ஜடாதரன், ஸ்ரீ ரமணி. ஸ்ரீ மஹாதேவன் மற்றும் ஸ்ரீ கோமகன் ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள்.*

*13.11.19 அன்று மூன்றுகால பூஜையை முடித்துக்கொண்டு ஸ்ரீமடம் முகாம் ஸ்ரீ மஹாஸ்வாமிகள் அவதார ஸ்தலமான விழுப்புரம் வந்தடைந்தது. வரும் வழியில் உடையார்பாளையத்திற்கு விஜயம் செய்த ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள் அங்குள்ள பயறனீஸ்வரர்கோயிலில் நடைபெற்ற திருப்பணி நிகழச்சியில் பங்கேற்றார்கள்.*

*14.11.19 முதல் 16.11.19 வரை விழுப்புரம் ஸ்ரீமடத்தில் பூஜை. 15.11.19 காலை விழுப்புரம் அருகே நடைபெற்ற கால்நடை பராமரிப்பு முகாமிற்கு சென்று அங்குள்ள மருத்துவர்களிடம் கலந்தாலோசித்தார்கள். வரும் வழியில் ஓரியண்டல் பள்ளி விஜயம். அங்குள்ள பள்ளிக்குழந்தைகளுக்கு அருளாசி வழங்கினார்கள்.*

*16.11.19 அன்று முகாம் விழுப்புரத்திலிருந்து புறப்பட்டு சென்னை சைதாப்பேட்டை ஸ்ரீநகர் காலனி வந்து சேர்ந்த்து. பி.எஸ். இண்டஸ்ட்ரீஸ் திரு ஸ்ரீநிவாஸன் அவர்களின் இல்லத்தில் ஸ்ரீ சந்த்ரமௌலீச்வர பூஜைக்கும், ஸ்ரீ பெரியவாள் தங்குவதற்கும் தனித்தனியே சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. அங்கு ??ரீ ஆசார்ய ஸ்வாமிகள் சுமார் ஒரு மாத காலம் தங்கி பூஜை செய்ய உள்ளார்கள்.*

*சஹஸ்ரதள பத்ம ஆராதனம்*

*ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ விஜயேந்த்ர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் அனுக்ரஹத்துடனும் அவர்களின் அருளாணையின் வண்ணம்ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீவித்யா சமிதியின் சார்பாக ''சஹஸ்ரதளபத்ம ஆராதனம்'' எனும் மாபெரும் நிகழ்வு 17.11.2019 அன்று சென்னை எழும்பூர் ராணி மெய்யம்மை ஹாலில் நடைபெற்றது. தமிழகம் முழுவதிலும் இருந்து 1000த்திற்கும் மேற்பட்ட ப்ராஹ்மண பெண்கள் (கன்யா, குமாரி, யுவதி) இந்த நிகழ்வில் பங்கேற்றனர். ஆதிசங்கர பகவத்பாதாள் எழுதிய ஸ்லோகங்களிலிருந்து கணேச பஞ்சரத்னம். சத்குரு சதகம், ஆதித்ய ஹ்ருதயம், வெங்கடேச சுப்ரபாதம், கனகதாரா ஸ்தோத்ரம், லக்ஷ்மி அஷ்டோத்ர ஸ்தோத்ரம், லக்ஷ்மி அஷ்டகம், கோவிந்தாஷ்டகம், கோவிந்த நாமாவளி, நாம ராமாயணம், அண்ணபூர்ணா ஸ்துதி, மைத்ரீம் பஜத ஆகிய ஸ்லோகங்களை 1000த்திற்கும் மேற்பட்டோர்ஒரே சமயத்தில் ஒரே குரலில் பாடிய மாபெரும் நிகழ்வு இது. இதற்காக கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக பங்கேற்றவர்களுக்கு பல்வேறு*

இடங்களில் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் ஸ்ரீ பெரியவாள் நேரில் கலந்து கொண்டு பங்கேற்றவர்களுக்கு ஆசி வழங்க மும்பையைச் சேர்ந்த தொழிலதிபர் ஈணூ.வி.சங்கர், ஸ்ரீமதி தேவகி முத்தையா, நவஸுஜா ஸ்ரீ வைத்யநாதன், ஸ்ரீமதி அய்யப்பன், சங்கரா தொலக்காட்சி நிர்வாக இயக்குநர் ஸ்ரீ சுரேஷ், திருமலா திருப்பதி தேவஸ்தான முன்னாள் சேர்மன் திரு. பாப்பிராஜு, சம்ஸ்க்ருத கல்லூரி திரு. சுந்தர்ராமன், முல்லைவாசல் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், ரயில்வே போர்டு திரு.சங்கரன் ஆகியோர் முக்கிய விருந்தினர்களாக கலந்து கொண்டு நிகழ்ச்சியை கண்டுகளித்தனர். ஸ்ரீ பெரியவாள் தனது ஆசியுரையில் நிகழ்ச்சியில் பங்கேற்ற குழந்தைகள் தர்ம சிந்தனையுடன் தொடர்ந்து வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்றும் முக்யமாக தனது தாய்மொழியையும் சமஸ்கிருதத்தையும் நன்கு கற்கவேண்டிய அவசியத்தையும் எடுத்துரைத்தார்கள். சங்கரா தொலைக்காட்சி இந்த நிகழ்வை நேரலையாக ஒளிபரப்பியது. மேலும் பலரும் இந்த நிகழ்ச்சியை இணையத்தின் வாயிலாக ஒளிபரப்பினார்கள். இதே போன்ற நிகழ்வு அதே நாளில் அதே நேரத்தில் பெங்களூர், ஹைதராபாத் மற்றும் திருப்பதி ஆகிய இடங்களிலும் நடைபெற்றது. மொத்தமாக சேர்த்து 2000த்திற்கும் அதிகமான குழந்தைகள் பங்கேற்றார்கள். இந்த நிகழ்ச்சிகளுக்கும் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் வீடியோ கான்பரன்ஸிங் மூலம் தெலுங்கில் ஆசியுரை வழங்கினார்கள்.

தொடரும்......

**ஸனாதன தர்மப் புதிர்கள்**
**நவம்பர் விடைகள்**

1. தன்வந்தரி ஜயந்தி
2. திருவையாறு
3. மருந்தீஸ்வரர்
4. சக்தி நாயனார்
5. நூபுர கங்கை
6. ரிஷபதேவர்
7. விவாஹம்
8. கடிகாஸ்தானம்
9. ஜம்பூ மரம்
10. வேதாந்த தேசிகர்

## கலை(ந்த) சொற்கள்
## நவம்பர் விடைகள்

1. கனாக்கண்டேன் தோழி
2. பகவத்பாத வைபவம்
3. சியாமளா தண்டகம்
4. ஹரி நாம ஸங்கீர்தனம்
5. புண்ணியகோடி

# தமிழ் பாகவதம்

தொகுப்பு : வீராபுரம் சம்பத் தீக்ஷிதர்



60. தூய்மையான ஸூக்ஷ்மமான (அணுவிற்கு அணுவாய்) எங்கும் நிறைந்திருக்கின்ற முக்கியமானவைகளையும் கடந்தவனாய் அனைத்து வடிவமாய்க் காணப்படுகின்ற உயர்குணங்களின் உறைவிடமான பரமாத்மாவிற்கு நமஸ்காரம்.

61. இவ்வுலகனைத்துக்கும் நாயகனாய், பரப்ரஹ்மஸ்வரூபனாய், தூய்மையான ஸத்வகுண ஸ்வரூபியான பரமேச்வரா உன்னை சரணமடைந்திருக்கிறேன்.

62. தோன்றியவைகள், தோன்றாப் போகின்றவைகள் எல்லாம் புருஷோத்தமனே நீர்தான். உம்மிடமிருந்து தான் விராட் புருஷன், ஸ்வராட் புருஷன், ஸாம்ராட் புருஷன் எல்லாம் காரணம். நீர்தான் புருஷோத்தமன்.

63. திசைகள், கேட்பவைகள், பூமி இவை எல்லாம் நீர்தான். ஆலமரத்தின் மிக நுண்ணிய விதையில் அம்மரமே அமைந்திருப்பது போல நீர் இருக்கிறீர்.

64. விதையினின்று முளைவிட்டு மரமாக ஓங்கி வளர்ந்து பரந்ததாக எப்படி ஆலமரம் ஆகிறது. அப்படி நீரே இந்த உலகினைப் படைத்தீர்.

65. எல்லா ஆத்மாக்களிலும் உறைபவா ! எல்லா உடலங்களுக்கும் காரணமானவே அல்லவா ஸத்வ குணத்தின் உறைவிடமே! எல்லாவற்றையும் நீர் அறிவீர். எல்லா ஜீவன்களின் மனோரதத்தையும் நீரே அறிவீர்.

இப்படி துதி செய்த துருவனைப் பார்த்து பகவான்:

66. என் பார்வையில் பட்ட என் பக்தனுக்கு எல்லாம் உண்டாகும். உனக்கு எந்த வரம் வேண்டுமோ அதைக் கேட்பாயாக.

67. இருக்கின்ற வரப்போகின்ற எல்லா உயிர்களிலும் உறையும் பகவானே என் மனதால் நான் என்ன விரும்புகிறேன் என்பது உமக்குத் தெரியாததா?

68. எல்லா உலகிற்கும் ஆதாரமானதும், எல்லா நிலைகளினின்றும் உயர்ந்ததும், ஒளி பொருந்திய, அழிவில்லாத அந்த உயர் இடத்தை வேண்டுகிறேன்.

69. எல்லாவுலகங்களைக் காட்டிலும் மேலானதும், எல்லா விண்மீன்கள், கோள்கள் இவைகள் ஆச்ரயிக்கின்ற உயர் இடம் என்னுடைய அருளால் உனக்கு உண்டாகப் போகிறது.

70. சூரிய மண்டலம், சந்திர மண்டலம், செவ்வாய் மண்டலம், புதன் மண்டலம், குருவின் மண்டலம். சூரிய புத்ரர்களின் உலகம் எல்லாவற்றிற்கும் மேலான நிலை உனக்கு உண்டாகும்.

71. எல்லா ரிஷிகளின் (அத்ரி, ப்ருகு, குத்ஸ, வஸிஷ்ட, கௌதம, காஸ்யப, அங்கீரஸ) இடங்களுக்கு மேலானதும், தேவலோகத்திற்கு மேற்பட்டதுமான உயர் இடம் உனக்கு அளிக்கப்பட்டது.

72. உனது தாய் ஸுநீதியும், குற்றமற்றவளாய், ஒளிவிடும் விண்மீனாக நீ உள்ளவரை இருப்பாள்.

73. தானும் உயர்ந்து, தாயையும் உயர்த்திய துருவ சரித்ரத்தை காலையும், மாலையும் எவர்கள் சொல்லுகிறார்களோ, அவர்களுக்கு மஹத்தான புண்ணியம் ஏற்படப் போகிறது.

(தொடரும்)

**ஸனாதன தர்மப்புதிர்கள்**
**டிசம்பர் வினாக்கள்**

1. பொருனை நதி எப்படி அழைக்கப்படுகிறது?
2. அம்பாளின் பெயரில் உள்ள உபனிஷத்துக்கள்
3. ஜோதிர்லிங்க க்ஷேத்ரமாயும் சக்தி பீடமாயும் உள்ள ஸ்தலம்
4. அம்பாளின் ஞ்யானபீடம்
5. ராமகங்கை இப்போதைய பெயர் என்ன?
6. பஞ்சவிஸ்வகர்மாக்கள் யார்?
7. ஸ்தாலீ புலக ந்யாயம் என்பது என்ன/
8. புண்யஸ்லோக மஞ்சரீ என்பது என்ன?
9. ஸாரஸ்வதர்கள் யார்?
10. பட்டினத்தாரின் இயற்பெயர் என்ன ?

# ஸ்ரீமத் தேவி பாகவதம் – 3

பி.ஆர்.கண்ணன்



வேத வியாஸ பகவானின் முதல் ஸ்லோகமே ஒரு மிக்க சக்திவாய்ந்த தேவி மந்திரமாக அமைந்துள்ளது.

ஓம் ஸர்வசைதந்யரூபாம் தாம் ஆத்யாம் தேவீம் ச தீமஹி ।

புத்திம் யா நஃ ப்ரசோதயாத் ॥

'ஓம், சைதன்யமே வடிவாயமைந்தவளும், எல்லாவற்றிற்கும் ஆதியாக உள்ளவளுமான தேவியை தியானிப்போம்; அவளே நம் புத்தியை நல்வழியில் தூண்டட்டும்.' சௌனகர் முதலான மகரிஷிகள் கலியின் சிரமத்திற்குப் பயந்து நைமிசாரண்யத்தில் தங்கி, நீண்டகால யாகங்களை இயற்றிக்கொண்டு, பகவத்பக்தியில் திளைத்துக் கொண்டிருந்தனர். ஸூதபௌராணிகர் வரவால் ஆனந்தமடைந்து, அவருடைய முகத்தினால் புராணங்களைச் சிரவணம் செய்துகொண்டிருந்தனர். அவர்கள், ஜகன்மாதா ஸகல தோஷங்களையும் களைந்து, இகபர நலன்களை அருளுபவளாயிற்றே என்று கூறி, அந்த பகவதியின் புராணத்தை சொல்லும்படி ஸூதரிடம் பிரார்த்தித்தனர். ஸூதரும் அவர்களைக்கொண்டாடி, ஸ்ரீ தேவிபாகவதத்தை ஆரம்பித்தார்.

## புராணத் தோற்றம்

மகாபிரளயகாலத்தில் எல்லாம் ஜலமயமாக இருந்தபோது, விஷ்ணுவானவர் ஆலஇலையின்மீது படுத்திருந்தார். தான் யார், எங்கிருந்து வந்தோம், எதற்காக

வந்தோம் என்றெல்லாம் அவர் குழம்பிக்கொண்டிருந்தபோது, தேவியின் ஆகாசவாணி கேட்டது:

ஸர்வம் கல்விதமேவாஹம் நாந்யதஸ்தி ஸநாதநம் ந 'இந்த எல்லாம் நான் தான்; வேறு ஒன்றும் நிலைத்த வஸ்து இல்லை' என்று. இந்த வாணியைக்கேட்டு அதீத ஆனந்தமடைந்த விஷ்ணுவிற்கு, கொஞ்ச காலத்திலேயே, தேவியின் தரிசனம் கிட்டிற்று. மஹாலக்ஷ்மி ஸ்வரூபமாக காட்சியளித்த தேவி, எல்லா ஸத்குணங்களும் மூர்த்தீகரித்து சூழ்ந்துகொண்டிருக்க, தான் நிர்குணமான ஆதிபராசக்தியின் ஸாத்விக ஸ்வரூபம் என்று கூறி, அவர் விஷ்ணு என்பதை நினைவுபடுத்தி, பிரம்ம, ருத்திரர்கள் தோன்றுவார்கள் என்றும், ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் தொடரும் என்றும், தேவியின் அரை ஸ்லோகம் ஸர்வசாஸ்திரங்களின் ஸாரமாகுமென்றும் கூறி மறைந்தாள். விஷ்ணுவானவர் தேவியின் அந்த அரை ஸ்லோகத்தின் நினைப்பிலேயே 'பரம தரித்திரனுக்கு புதையல் கிடைத்தாற்போலே' வெகு ஆனந்தப்பட்டார். இந்த ஸ்லோகத்தை பின்னர் விஷ்ணு பிரம்மாவிடம் கூற, பிரம்மா அதை அடிப்படையாகக்கொண்டு 100 கோடி ஸ்லோகங்கள் கொண்ட ஸ்ரீ தேவிபாகவதம் என்கிற அரிய கிரந்தத்தை யாத்தார். அதனை அவர் நாரதருக்கு உபதேசிக்க, நாரதர் வியாஸருக்குச் சொல்ல, வியாஸர் அதைச் சுருக்கி 18000 ஸ்லோகங்கள் கொண்ட புராணமாக ஆக்கி, அதை ஸூதருக்கும், தன் புத்திரரான சுகருக்கும் அனுக்ரகித்தார். வேதம், உபநிஷத், பிரம்ம ஸூத்ரம் இவற்றை ஆழ்ந்து அறியும் சித்தசுத்தி, மனஉறுதி ஆகியவைகள் மலினமாக இருக்கும் கலியுகத்தில் உள்ள மனிதர்களின் மீது கொண்ட கருணையால், வியாஸ பகவான் புராணங்கள், மகாபாரதம் ஆகியவற்றை ஆக்கி அனுக்ரகித்தார். அதே அடிப்படையில் தான், விரிவான தேவிபாகவத புராணத்தைச் சுருக்கி எல்லோரும் பயனடையும்வண்ணம் உபதேசித்தார். ஒவ்வொரு சதுர்யுகத்திலும், த்வாபர யுகக் கடைசியில் வியாஸர் என்பவர் உதித்து இந்த பணியைச் செய்கிறார். தற்போதைய சதுர்யுகத்தின் வியாஸர் பராசரர், ஸத்தியவதியின் புத்திரரான க்ருஷ்ண த்வபாயனராவார்.

## ஹயக்ரீவ சரித்திரம்

ஒரு சமயம் பிரம்மதேவர் தியானத்திலிருந்த விஷ்ணுவிடம் 'தாங்கள் யாரைத் தியானிக்கிறீர்கள்? தாங்களோ ஜகத்பதி' என்று கேட்டார். விஷ்ணு பிரம்மாவுக்கு ஹயக்ரீவ சரித்திரம், மதுகைடபவத சரித்திரம் இவற்றை நினைவூட்டி, தான் ஸ்வதந்திரனில்லை, பரதந்திரன், தேவியின் கட்டுப்பாட்டில் இருப்பவன் என்பதை எடுத்துக் கூறினார்.

விஷ்ணு ஒரு சமயம் அசுரர்களுடன் 10000 வருஷங்கள் ஒரு பெரிய யுத்தம் நடத்தி, அதிகச் சோர்வினால் ஓரிடத்தில் அமர்ந்து, தன் வில்லினை நெடுங்குத்தாக வைத்து, வில்லின் நுனியில் தலையைத் தாங்கி, அவ்வாறே நித்திரையில் ஆழ்ந்தார். தேவேந்திரன் அச்சமயம் ஒரு யக்ஞத்திற்கு ஏற்பாடு செய்து, பிரம்மா, சிவன் இவர்களை அழைத்து, பிறகு விஷ்ணுவை வைகுண்டத்தில் தேடிக் கிடைக்காமல் அவர் இருந்த இடத்தைக் கண்டறிந்து அவர் நித்திரையிலிருந்ததைக் கண்டான். நித்திரையில் இருப்பவரை எழுப்புவது அதர்மமாகையால், கூட இருந்த பிரம்மா கரையானை முதல் தடவையாக ஸ்ருஷ்டித்து, கரையானிடம் விஷ்ணுவின் வில்லின் நாண் கயிற்றை அரித்து அறுத்துவிடுமாறு கூறினார். கரையான் பிரம்மாவின் நேர் ஸ்ருஷ்டியானதால், தர்ம் சாஸ்திரம் பேசிற்று: 'நித்திரையைக் கலைத்தல், தார்மீகக் கதைக்கு விக்னம் உண்டுபண்ணுதல், தம்பதிகளுள், மற்றும் தாயார், குழந்தையிடையில் பிளவை ஏற்படுத்தல் இவை பிரம்மஹத்தி தோஷத்திற்கு சமமாகையால், நான் எவ்வாறு அக்காரியத்தை செய்வேன்' என்றது. பிரம்மா கரையானை சமாதானப்படுத்தி, கரையானும் அவ்வாறே நாண்கயிற்றை அறுத்துவிட்டபோது, திடீரென்று பேரிரைச்சலும், கும்மிருட்டும் சூழ்ந்தன. பூமி நடுங்கிற்று; ஸமுத்திரம் பொங்கிற்று; கோள்கள் நிலைமாறின. தேவர்கள் நடுங்கிப்போய், அருகில் சென்று பார்த்தபோது, வெகுவாக திடுக்கிட்டார்கள்; காரணம், நாணறுந்த வில்லின் தாக்குதலால் விஷ்ணுவின் தலைபாகம் அறுந்து, காணாமல் போயிற்று; சரீரபாகம் மட்டுமே இருந்தது. விஷ்ணுவின் சிரசு எங்கு தேடியும் கிடைக்கவில்லை. பிரம்மா, கூடவே மூர்த்தீகரித்து இருந்த வேதங்களை ஜகன்மாதாவை ஸ்தோத்திரம் செய்யச் சொன்னார். வேதஸ்துதி மிக்க அத்புதமானது. வேதங்கள் கூறினர்: 'தேவியே, பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோரைத் தோற்றுவித்து ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார காரியங்களை நீயே நிகழ்த்துகிறாய். ஸகலகுணங்களையும் தாங்குகிறாய். ஆனால் பிரம்மாண்டங்களின் வாஸனை உன்னிடம் லவலேசம் கூட ஒட்டுவதில்லை; என்ன ஆச்சரியம். உன் நாம ரூப லீலைகள் அனந்தம். உன் வைபவம் நீயே அறியாதது. நாங்கள் எவ்வாறு போற்றுவோம். ஒரு சொட்டு நீர் ஸமுத்திர ஜலத்தை அளவிடமுடியுமா? விஷ்ணுவின் சிரஸ் காணாமல் போய் நாங்கள் படும் துன்பத்தை தாங்களே தீர்த்தருளுங்கள்' என்று. வேதங்களின் ஸ்தோத்திரத்தினால் பிரீதியடைந்த தேவி தரிசனம் தந்து, இந்த ஸ்தோத்திரம் வேதத்திற்கே ஸமானம் என்று அருளி, விஷ்ணுவின் சிரஸ் காணாமல்போனதன் காரணத்தைக் கூறினாள். ஹயக்ரீவன் என்ற ஒரு அசுரன் 1000 வருஷங்கள் தபஸ் செய்து, தேவியிடம் ஹயக்ரீவரால்தான் தனக்கு வதம் நிகழும் என்ற

வரத்தைப் பெற்றிருந்தான். அவனுடைய அக்கிரமங்கள் எல்லையின்றி பெருகவே, அவனை ஒழிக்கவேண்டிய கட்டம் தற்போது வந்துள்ளதால், விஷ்ணுவிற்கு குதிரைத்தலையைப் பொருத்தினால், அவர் ஹயக்ரீவராக (ஹயம்-குதிரை; குதிரைத்தலையராக) விழித்தெழுந்து, ஹயக்ரீவ அசுரனைக்கொல்வார் என்று தேவி அனுக்ரகித்தாள். அவ்வாறே, ஹயக்ரீவர் கையினால் அந்த அசுரன் வதம் முடிந்தது.

ஹயக்ரீவர் ஞானஸ்வரூபமானவர். தேவி பக்தர்களில் தலைசிறந்தவர். அகஸ்திய முனிவருக்கு அவர் உபதேசித்த லலிதோபாக்கியானம் - லலிதா ஸஹஸ்ரநாமம், லலிதா த்ரிசதீ முதலானவை - தான் நமக்கு இப்போது பாராயணத்திற்குக் கிடைத்துள்ள பொக்கிஷமாகும்.

(வளரும்)

ஊருக்குப் பண்ணினால் நாலு பேர் நம்மைக் கொண்டாடுவார்கள். வீட்டுக்கு நாம் செய்ய வேண்டிய கடமையைச் செய்வதற்காக, வீட்டார் நம்மைக் கொண்டாட மாட்டார்கள்தான். வீட்டுக்குப் பண்ணாமல், தன் சொந்தக் கார்யத்தைப் பண்ணிக் கொள்ளாமல், ஊருக்கு ஒருத்தன் பண்ணுகிறான். அதற்கு இடைஞ்சலாகச் சொல்கிறார்களே என்று வீட்டுக்காரர்களிடம் எரிந்து விழுந்து கொண்டிருக்கிறானென்றால் அவனுக்கு வாஸ்தவமான தொண்டு உள்ளமே இல்லை, பேர் வாங்குவதற்காகத்தான் சோஷியல் ஸர்வீஸ் என்று பண்ணுகிறான் என்றே அர்த்தம்.

**ஜகத்குரு ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் அருள்மொழிகள்**

Everyone will praise us when we perform social service but we will not be appreciated when fulfilling our household duties. When a person shows more interest in social service and neglects his duties, his family members will naturally object. If a person considers them to be hindrances in the way of his social service and gets irritated with them, it only means that he is not suited for social service and he is performing it only for the sake of publicity. –

Jagadguru Sri Chandrasekharendra Saraswathi Swamigal

# வாழ்வின் நான்கு நிலைகள்

இராமாயணம்

**ப்ரம்மசர்யம்**

ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் நான்கு நிலைகள் உள்ளன. இவற்றினை ஆசிரம் எனப்படுகிறது.

இந்த ஆசிரமம் என்ற சொல்லுக்கு சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டிய நிலை என்று அகராதியில் கூறப்பட்டுள்ளது. இந்த ஆச்ரமங்களுக்கு என்று தனித்தன்மையை கடைப்பிடிக்க வேண்டிய தர்மங்களும் உண்டு.

இன்றைய இளைய சமுதாயம் இவற்றைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் எழுதப்படுவதே இந்தக் கட்டுரை.

இப்படி ஒன்று இருக்கிறது என்று தெரிந்திருந்தால் அதனை கடைபிடித்திருப்போமே என்ற நிலை ஏற்பட்டு விடக் கூடாதே என்ற எண்ணத்தில் எழுந்ததே தான் இந்தக் கட்டுரை.

வாழ்க்கையின் நான்கு நிலைகம் பின்வருமாறு:

1. பிரும்மசர்யம்
2. கார்ஹஸ்த்யம்
3. வானப்ரஸ்தம்
4. ஸன்யாஸம்

இந்த நான்கு நிலைகளில் முதன்மையானது. பிரம்மசர்யம் என்பது. அதனைப் பற்றி முதலில் அறிந்து கொள்வோம்.

**பிரம்மசர்யம்**

பிரம்மம் என்ற சொல்லுக்கு எங்கும் பரந்த தன்மை உடைய பரமாத்மா என்ற பொருளும் வேதம் என்ற பொருளும் உண்டு. இந்த வேதத்தை தமிழில் மறை என்பார்கள். இதனை படித்து பழக்கத்தில் கொண்டு வருபவரை பிரம்மச்சாரி என்பார்கள்.

தமிழ்நாட்டில் ஔவை ஓதாமல்ல ஒரு நாளும் இருக்க வேண்டாம் என்று கட்டளை இட்டிருக்கிறார். ஓதுதல் என்ற சொல்லுக்கு சொல்லுதல் என்று பொருள். படித்தல் என்பதற்கு புத்தகத்தைப் பார்த்து படிப்பது என்று பொருள். ஓதுதல் எனில் தனது ஆசான் சொல்வதை கவனமாகக் கேட்டு அதனை அங்கனமே அருகாமையில் உள்ள இரண்டாவது கண் என்று பொருள். நயனம் எனில் காணும் பொருளிடம் மனதை அழைத்துச் செல்கிறது என்று பொருள் பேதத்திடம் அழைத்துச் செல்வதற்கானது என்ற பொருளிலேயே உபநயனம் என்று கூறப்படுகிறது.

உபநயன காலத்தில் வடுவிற்கு காயத்ரி என்ற உயர்ந்ததான மந்திரத்தை கற்றுக் கொடுக்கப்படுகிறது. இந்த மந்திரத்திற்கும் உயர்ந்ததான மந்திரம் கிடையாது என்பதை கீழ்கண்டவாறு காட்டப்பட்டுள்ளது.

ந காயத்ரியா பரம் மந்தரம் ।

ந மாதுர் பரா தைவதம் ।।

காயத்ரியைக் காட்டிலும் உயர்ந்ததும், சிறந்ததுமான மந்திரம் கிடையாது எனவும் தாயைக் காட்டிலும் உயர்ந்த சிறந்த தெய்வமும் கிடையாது என்பது இந்த மந்திரத்தின் சிறப்பு.

தன்னை ஸ்வர சுத்தமாக சொல்பவனை காப்பவை என்பதால் இந்த மந்திரத்திற்கு காயத்ரி என்று பெயர். பிசகின்றி சொல்லுதல் என்பதற்கே ஓதுதல் என்று பொருள்.

வேதத்தை புத்தகம் பார்த்து படிப்பதால் குருமுகமாக சொல்லக் கேட்டு சொல்லுவது என்பதால் அதற்கு ச்ருதி என்றொரு பெயரும் உண்டு.

இந்த வேதத்தை ஓதுவதற்கான தகுதி உபநயனம் செய்து கொண்ட பிறகே கிடைக்கிறது என்பதால் உபநயனம் செய்து வைத்து குருவிடம் வாசம் செய்து வேதத்தைக் கற்று கொள்ள அனுப்புவார்கள். அப்படி அனுப்பப்படுபவனுக்கு வடு என்று பெயர் குருவினிடம் படிப்பதற்கு குருகுல வாஸம் என்பார்கள்.


குரு வேதத்தை மட்டும் சொல்லித் தராமல் வாழ்க்கைக்குத் தேவையான நற்பண்புகளையும், நடத்தைகளையும், ஒழுக்கத்தையும் சொல்லாகக் கொடுப்பார். குருகுல வாஸம் முடித்தவன் சமுத்ரபதத்திற்கு தொண்டு செய்யும் நல்ல மனிதனாக வெளிவருவான்.

(தொடரும்)

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி 19

ஸ்ரீநிவாச வரதாச்சார்யார்

நான் பலவிடங்களில் நம் நாட்டில் உபன்யாஸம் செய்பவன். இதெல்லாம் பெரியவாளின் அனுக்ரஹம். கொல்கொத்தாவில் நான் உபன்யாஸம் செய்து வரும் போது எனக்கு பொருள் உதவி இட வசதி செய்து வரும் சேட்ஜி பலவருடங்களாக குடல் நோயால் அவதிபட்டுக்கொண்டிருந்தார்.



அவருக்கு வாய் வழியாக ஆகாரம் கிடையாது. வயிற்றுப் பகுதியில் ஓட்டைப் போட்டு அதன் வழியாகத்தான் ஆகாரம். மிகவும் மன உளைச்சல்.

நான் உபன்யாஸங்களின்போது பெரியவாளின் மகிமைப் பற்றி பேசுவேன். அதைக் கேட்ட அவர் பெரியவாளைச் சந்திக்க ஆவலாயிருந்தார்.

நானும் இதைப்பற்றி பெரியவாளுடன் பேசும்போது சொன்னேன். ஏனோ தெரியவில்லை பெரியவா ஒன்றும் சொல்லவில்லை. மீண்டும் ஒருமுறை சொன்னபோது ப்ரசாதம் எடுத்துண்டு போ என்றார். சேட்ஜிக்கு ஆர்வம் தணியவில்லை. அப்போது நூம்பல் க்ராமத்துக்குப் பெரியவா வந்திருந்தார். நான் வழக்கம்போல் வந்தனம் செய்தபின் மீண்டும் சேட்ஜியைப் பற்றிச் சொன்னேன்.

பெரியவா உபன்யாஸத்துக்கு சகாயம் பண்ரானோ?

நான் ஆமாம் பெரியவா

பெரியவா இது ரொம்ப கஷ்டம். சொன்னா செய்வானா? நான் பல கோடி வர்தகம் செய்றார். நிச்சயமாக செய்வார். பெரியவா உனக்கு 18 புராணங்கள் தெரியுமா. அந்த எல்லா புராணங்களையும் அச்சுபோட்டு வைதிகாளுக்குக் கொடுக்கச்சொல்லு. இப்படி உத்தரவு வந்தவுடன் ஸேட்ஜியும் மனம் மகிழ்ந்து அச்சுப்போட்டு

வைதிகர்களுக்கு கொடுத்தார். புத்தகத்தில் விலை எனுமிடத்தில் ''ப்ரேம்'' என்று பதிப்பித்திருந்தார். ஆனால் அவருடைய உடல் நிலையில் எந்த மாற்றமும் இல்லை. ஆச்சர்யம் கடைசி புராணமான ஸ்கந்த புராணம் வெளி வந்தது . வாய்வழியாக ஆகாரம் உட்கொள்ள ஆரம்பித்து நல்ல நிலைக்கு வந்தார். அளவில்லா ஆனந்தம். ஓடி வந்து பெரியவாளை நமஸ்கரித்து கண்ணீர்மல்க நின்றார். நானும் உங்களுடைய கருணை என்று பெரியவாகிட்ட சொன்னேன். பெரியாவாளோ அதெல்லாம் ஒண்ணுமில்ல . தர்மசாஸ்த்ரத்தைக் காப்பாற்றினான். அவை அவனை காப்பாற்றியது என்று சொல்லி சேட்ஜியை ஆசீர்வத்தித்து அனுப்பினார். அவருக்கு நம் சாஸ்த்ரங்களின் மீது இருந்த மதிப்பை உணர்ந்து வியந்தேன்.

''ஊர்க் குழந்தையை ஊட்டி வளர்த்தால் தன் குழந்தை தானே வளரும்'' என்று அடிக்கடி quote பண்ணித்தான் இருக்கிறேன். அதாவது உன் குழந்தையைப் பட்டினி போட்டுவிட்டாவது போய் ஊர்க் குழந்தையை ஸவரக்ஷணை பண்ணு என்று சொல்லித்தான் வந்திருக்கிறேன். அப்படிப் பழமொழி இருப்பதும் வாஸ்தவம். ஸத்யமாக இல்லாத ஒன்று பழமொழியாக ஆகிறதில்லை. ஆனால் இந்தப் பழமொழி ரொம்ப உசந்த நிலையில், தொண்டு மனப்பான்மையில் அப்படியே ஊறிப் போனவர்களைக் குறித்து ஏற்பட்டிருக்க வேண்டும். அவர்கள் மனஸறிந்து தன் குழந்தையைக் கதற விட்டுவிட்டு ஊர்க் குழந்தையைச் சீராட்டினார்களென்று அர்த்தமில்லை. பரோபகாரத்தில் அவர்களுக்குள்ள தீவிர உணர்ச்சி வேகம் அவர்களை இப்படி அடித்துக் கொண்டு போயிருக்கிறது. பக்தி வெறியில் ஒவ்வொரு நாயன்மார் லோக தர்மங்களுக்கு விரோதமாகக்கூடப் பண்ணவில்லையா? அப்படி இதுவும் ஒரு பரவச நிலையில் பண்ணுவது. அப்படி இவர்கள் தங்களுக்கு அதீதமான ஒரு சக்தியின் கீழ் ஊரிலே உள்ள அநாதைக் குழந்தைகளின் நலனுக்கே தங்களை அர்ப்பணம் பண்ணிக் கொண்டபோது, ஈஸ்வர பிரஸாதமாக வீட்டிலே இவர்களுடைய குழந்தைகள் கவனிப்பு இல்லாமலே (அல்லது ஈஸ்வரனின் கவனிப்பிலேயே) நன்றாக வளர்ந்திருக்கும். இது ஸாதாரணமாக லோகத்திலிருக்கப்பட்டவர்களுக்கு 'எக்ஸாம்பிள்' ஆகாது. அதாவது ஸோஷல் ஸர்வீஸ் செய்கிறோமென்று தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டு விடக்கூடாது. –ஜகத்குரு ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் அருள்மொழிகள்

# புராணக் கதை

*காஞ்சி வாதூலன்*

## நன்றி கொன்ற அந்தணன்

கௌடதேசத்தில் கௌதமன் எனும் ப்ராம்மணன் இருந்தான். அந்தணன் என்பது பேருக்குத்தான். எந்த ஒழுக்கமும் கிடையாது. ப்ராம்மண பந்துவாக பணத்தின் மீது குறிவைத்து வாழ்க்கையை நடத்திவந்தான். கேடு வந்தது அவனுக்கு. கொள்ளையர் கூட்டமொன்றில் சேர்ந்து ப்ராணிகளை வேட்டையாடி காலத்தைக் கழித்தான். வேட்டுவபெண் ஒருவளையும் மணந்தான்.

தன் நாட்டில் எதுவும் கிடைக்காது என்று தீர்மானம் செய்து தேசாந்த்ரம் செல்ல முடிவு செய்து வணிகர் கூட்டமொன்றில் இணைந்து வெளிச்சென்றான். அவர்கள் சென்ற வண்டி குடை சாய்ந்து விழுந்து அதிலிருந்து தப்பித்து ஒரு வனத்தை அடைந்தான். கடுமையான வெப்பம். மனமும் உடலும் சோர்ந்து ஆலமரம் ஒன்றின் கீழ் இளைப்பாறினான். தன்னையும் தன் விதியையும் நொந்து கொண்டு அங்கே படுத்திருந்த வேளையில் அம்மரத்தில் குடி கொண்டிருக்கும் நாடீஜங்கன் எனும் நாரை வந்தது. கீழே வழிபோக்கனொருவன் எதுவுமில்லாமல் துன்பத்திலிருப்பதைப் பார்த்து கழிவிரக்கம் கொண்டு அவனைப் பார்த்து பேசியது. அந்தணனே நீர் யார்? எங்கிருந்து வருகிறீர்? மிகவும் களைத்திருக்கிறீர். அதிதியை வணங்கவேண்டும் என்று வேதம் உரைக்கிறது. எனவே இந்தாருங்கள் இக்கனிகளை உண்ணுங்கள், இந்த பானத்தையும் பருகுங்கள் என்று கூறி அவனுக்கு கனிகளையும் நீரையும் அளித்தது. கௌதமனும் அவைகளை உண்டு மகிழ்ந்து தன்னைப்பற்றிய விவரங்களைக் கூறினான்.

இதைக்கேட்ட ராஜ நாரை ''அந்தணரே கவலை வேண்டாம் , பத்துக்காதம் போனால் என் நண்பன் விரூபாக்ஷன் எனும் ராக்ஷஸ மன்னனின் நகரம் வரும். அங்குபோய் அவனிடம் நான் அனுப்பியதாகச் சொல்லுங்கள். உங்களுக்குத் தேவையானவைகளை அவர் செய்வார்'' என்றது. அவனும் அந்த தேசத்தை அடைந்து விரூபாக்ஷ அரசனை அண்டினான். அரசனும் நாடீஜங்கன் அனுப்பியதால் அவனிடம் பரிவு கொண்டு அன்னபானாதிகளைத் தந்து நிறைய தனங்களையும் விலையுர்ந்த பொருள்களையும் அளித்து அவனை அனுப்பினான்.

தூக்கமுடியாமல் பொருள்களைத் தூக்கிக்கொண்டு தடுமாறினான். பசி வயிற்றைக்கிள்ளியது. சுற்றுமுற்றும் பார்த்தான். தூரத்தில் நாடீஜங்கன் இருந்த ஆலமரம் தெரிந்தது. அவனது குரூர எண்ணம் வேலைசெய்தது. அவ்விடத்திற்குச் சென்ற அவன் தூங்கிகொண்டிருந்த பறவையைக் கொன்றான், அதைத் தின்றான்.

இதன் நடுவில் விரூபாக்ஷன் மூன்று நாளாக நாடீஜங்கன் தன்னைக் காண வரவில்லை என்பதை நினைத்து அச்சப்பட்டு ''மந்த்ரியாரே நாடீஜங்கன் வந்து மூன்று நாளாகிறது, எனக்கு அந்த ப்ராம்மணனின் மீது ஐயமாயுள்ளது, நீர் போய் பார்த்துவரவும்'' என்றான். வீரர்களுடன் சென்ற மந்த்ரி கானகத்தில் தேடும் போது நாடீஜங்கனின் எலும்புகளைக் கண்டு அதிர்ச்சி அடைந்தான். சிறிது நேரத்தில் கௌதமனையும் கைது செய்து நாரையின் எலும்புகளையும் எடுத்துக் கொண்டு அரசனிடம் சென்றான்.

அதிர்ச்சியில் உறைந்த அரசன் கௌதமனுக்குச் சிரச்சேதம் விதித்தான். அவனது உடலை கழுகுகளுக்குப் போட போனபோது அவைகள் நன்றி கொன்றவனுடைய மாம்ஸம் எமக்கு வேண்டாம் அப்படியே அழுகட்டும் என்று கூறி போய்விட்டன. ராக்ஷஸர்களும் கேடு கெட்டவனுடைய மாம்ஸம் எமக்கு வேண்டாம், இவனொரு இழிபிறவி என்றனர். கவலையில் ஆழ்ந்த அரசன் தன் நண்பன் நாடீஜங்கனுக்கு இறுதி ஸம்ஸ்காரம் செய்ய அவனது எலும்புகளை அடுக்கும்போது வான் வழியில் சென்றுகொண்டிருந்த காமதேனு சுரந்த பால் கீழே எலும்புகளின் மீது விழ அவனும் எழுந்தான்.

அரசனும் மகிழ்வெய்தினான். அப்போது அங்கு வந்த இந்த்ரன் முனிவரின் சாபத்தால் நாரைக்கு மரணம் சம்பவித்தது, அதுவும் போயிற்று என்று கூற நாடீஜங்கனும் தன் நண்பன் கௌதம ப்ராம்மணனும் உயிர் பிழைக்க வேண்ட நன்றிகெட்ட அவனும் எழுந்தான். ராஜ நாரையும் அவனைத் தழுவி வழி அனுப்பி வைத்தான்.

(மகாபாரதம் சாந்திபர்வம்)

(தொடரும்)

# வேதாந்த ஸாரம்

## ஸதானந்த் யோகிந்த்ரர்

வேங்கடகணபதி சர்மா

### *சூக்ஷ்ம சரீத்தின் அமைப்பு*

**ஏதே புனராகாசாதிகத ஸாத்விக அம்சேப்யோ மிலிதேப்ய உத்பத்யந்தே ॥ 70**

*இவைகள் அனைத்தும் ஆகாசத்தின் சத்வ அம்சத்தின் சேர்க்கையால் உண்டாகின்றன.*

**ஏதேஷாம் ப்ரகாசாத்மகத்வாத் ஸாத்விக அம்ச கார்யத்வம் ॥ 71**

*இவைகள் ப்ரகாசமாயிருப்பதால் ஸாத்விக அம்சத்தின் கார்யம் எனப்படும்.*

**இயம் புத்தி ஞ்யானேந்த்ரியை: ஸஹிதா விஞ்யானமய கோசோ பவதி ॥ 72**

*ஞ்யான இந்த்ரியங்களுடன் கூடிய புத்தி விஞ்யானமய கோசமெனப்படும்.*

**அயம் கர்த்ருத்வ போக்த்ருத்வ ஸுகித்வ துக்கித்வாதி அபிமானத்வேன இஹலோக பரலோககாமீ வ்யவஹாரிகோ ஜீவ உச்யதே ॥ 73**

*நான் கர்தா போக்தா நான் ஸுகீ துக்கீ எனும் அபிமானத்துடன் இந்த லோகத்திற்கும் பரலோகத்திற்கும் செல்லும் இவன் வ்யவஹாரத்தில் ஜீவன் எனப்படுவான்.*

**மனஸ்து ஞ்யானேந்த்ரியை: ஸஹிதம் ஸன் மனோமயகோசோ பவதி । 74**

*ஞ்யானேந்த்ரியங்களுடன் ஸேர்ந்த மனம் மனோமயகோசமெனப்படும்.*

**கர்மேந்த்ரியாணி வாக் பாணி பாத பாயூ உபஸ்தாக்யானி ॥ 75**

*நாக்கு, கை, பாதம், குதம், ஆண் பெண் குறி கர்மேந்த்ரியங்கள் ஆகும்.*

**ஏதானி புனராகாசாதீனாம் ரஜோ அம்சேப்யோ வ்யஸ்தேப்ய:ப்ருதக் ப்ருதக் க்ரமேண உத்பத்யந்தே ॥ 76**

*இவைகள் ஆகாசத்தின் ரஜஸ் அம்சத்திலிருந்து தனித் தனியாக உண்டாகின்றன.*

**வாயவ: ப்ராண அபான வ்யான, உதான, ஸமானா: ॥ 77**

*ப்ராணன், அபானன், வ்யானன், உதானன், ஸமானன் வாயுக்கள் எனப்படும்.*

**ப்ராணோ நாம ப்ராக் கமனவான் நாஸாக்ரஸ்தான வர்தீந 78**

*மேலே செல்வது, மூக்கின் உச்சியில் ஸ்தானத்தை உடையது ப்ராணன்.*

**அபானோ நாம அவாக்கமனவான் பாய்வாதிஸ்தான வர்தீ ।। 79**

*கீழ் நோக்கி செல்லும்வாயு விஸர்ஜன ஸ்தானத்தை உடையது அபானன்*

**வ்யானோ நாம விஷ்வக்கமன்வான் அகிலசரீரவர்த்தீ । 80**

*சரீரத்தில் எங்குமிருப்பது எல்லா திசைகளிலும் செல்பவன் வ்யான வாயு.*

**உதானோ நாம கண்டஸ்தானீய ஊர்த்வகமனவான் அனுத்க்ரமணவாயு: ।।**

*தொண்டையில் இருப்பது சரீரத்திலிருந்து கிளம்பி மேலே செல்லும் வாயு உதானன் எனப்படும்.*

**ஸமானோ நாம சரீரமத்யகதாசித பீதான்னாதி ஸமீகரணகர: ।। 82**

*சரீரத்தின் நடுவில் இருந்துகொண்டு உண்பது குடிப்பது இவைகளைச் செய்யும் வாயு ஸமானன் எனப்படும்.*

**ஸமீகரணஸ்து பரிபாககரணம் ரஸருதிரசுக்ரபுரீஷாதிகரணமிதி யாவத் ।। 83**

*அன்னத்தைப்பக்வம் செய்து அதை ரஸம் ருதிரம், விந்து மலம் இவைகளைச் செய்வது ஸமீகரணம் என்பர்.*

**கேசித்து நாக கூர்மக்ருகல, தேவதத்த தனஜ்யாக்யா: பஞ்சான்யே வாயவ: ஸந்தீதி வதந்தி ।। 84**

*சிலர் நாகன் கூர்மன் க்ருகலன், தேவதத்தன், தனஞ்சயன் என்று ஐந்து வாயுக்களைக் கூறுகின்றனர்.*

**தத்ர நாக உத்கிரணகர: நகூர்ம உன்மீலிகர:ந க்ருகல: க்ஷுத்கர:நதேவத்த்தோ ஜ்ரும்பண்கர:ந தன்ஞ்சய: போஷணகர: ।। 85**

*இவைகளில் நாகன் வாந்திசெய்வது, கூர்மன் இமைகள் திறப்பது, க்ருகலன் பசிதூண்டி, தேவதத்தன் கொட்டாவி விடுவது, தன்ஞ்சயன் உடல் போஷணை செய்தல் இவைகளைச் செய்யும்.*

தொடரும்

# பித்ரார்ஜிதம்

*அல்பஸ்ருதன்*

## பிள்ளையார் பூஜை

வீட்டில் பூஜை செய்பவர்கள் படம் வைத்தோ விக்ரகம் வைத்தோ வழிபடுவார்கள். படத்துக்கு மாலை சார்த்தி தூபம் காட்டி தீபாராதனை செய்து பால் பழம் நிவேதனம் செய்வது வழக்கம். இதற்கு ஒரு படிமேல் செய்பவர்கள் மாக்கல்லாலன பிள்ளையாருக்கு அபிஷேகம் செய்து சந்தனம் பூசி வினாயகர் அகவல் படித்து நிவேதனம் செய்வர். இதை ஆண்கள் தான் செய்வது வழக்கம்.

### பஞ்சாயதன பூஜை

ஸ்மார்தர்கள் இதை செய்வது வழக்கம். சிவ பூஜை என்றாலும் ஆதித்யன் அம்பாள் விஷ்ணு, கணபதி சிவன் இவர்களை சிலா மூர்த்தன்களாக ஆராதிப்பர். பால் , சந்தனம் அபிஷேகம் செய்து வேத ஸூக்தங்கள் சொல்லி பில்வ, துளசீ மற்றும் புஷ்பங்களால் அர்ச்சனை செய்வர். அன்னம், பருப்பு நிவேதனம் செய்வர். த்யானம், ஆவாஹணம் ஆஸனம் முதல் அர்க்யம், ப்ரார்தனை முடிய 27 உபசாரங்களை விஸ்தாரமாக செய்வதும் வழக்கம்.

### விஷ்ணு ஆராதனம்

ஸ்ரீ வைஷ்ணவர்கள் வீட்டில் சாளக்ராமத்துக்குத்தான் பூஜை. ஆராதிப்பவர்கள் இருகையையும் தட்டி ஸுப்ரபாதம் சொல்லி கோவிலாழ்வாரைத் திறப்பர். மந்த்ர, ஸ்னான, அலங்கார, போஜ்ம், புனர்மந்த்ர, பர்யங்கா ஸனங்கள் எனும் ஆறு நிலைகளில் பூஜை. முதலில் குரு பரமபரை பின்னர் ப்ல்லாண்டு பள்ளியெழுச்சி ந்யாஸ தசகம் சொல்லி புருஷ ஸூக்தம் சொல்லி திருமஞ்சனம். அலங்காரங்கள் முடித்த பின் தூபம் மந்த்ரபுஷ்பம் அஷ்டோத்ரம் துளஸி அர்ச்சனை செய்வார்கள். பின்பு சுத்தான்னத்தில் நெய்கலந்து நிவேதனம்.

பின்பு கர்பூர ஹாரத்தி த்த்விஷ்ணோப் பரமம் பதம் கூறி சிற்றன்சிறுகாலே, வங்கடலில் பாடி சாற்றுமுறை செய்து முடிக்கின்றனர். பர்யங்காஸனத்தில் தாம்பூலம் ஸமர்ப்பித்து கோவிலாழ்வாரில் எழுந்தருளப்பண்ணுவர். திருமஞ்சன தீர்த்தத்தை மூன்று முறை ஒவ்வொருவரும் பெற்றுக்கொண்டதும் திருவாராதனம் முடியும்.

**மாத்வர்கள் ஸம்ப்ரதாயம்**

இதில் மாத்வர்கள் ஒருபடி மேல் போயிருக்கிறார்கள். தந்த்ரசார ஸங்க்ரஹம் பாஞ்சராத்ர ஸங்க்ரஹம் பத்ய மாலா என்றும் ஆசார்யர்கள் சுருக்கி அனுக்ரஹம் செய்ததை அனுசரித்து நூறு தேவதைகளுக்கு தினமும் பூஜை உண்டு. ஸம்ஸ்க்ருத வர்ணமாலா 51 எழுத்துக்கு அஜன் முதல் நரசிம்மர் வரையில் 51 கேசவாதி 24 ஆத்மா அந்த்ராத்மா பரமாத்மா ஞ்யானாத்மா 4 வாஸுதேவ ஸங்கர்ஷ்ண ப்ரத்யும்ன அனிருத்தன் 4 விஸ்வன் தைஜசன் ப்ராஞ்யர் துரீயர் 4 அவதாரங்கள் 10 தத்தாத்ரேயர் சிம்சுமாரர் 3 ஆக 100 அந்தர்யாமியான லக்ஷ்மீ நாராயணனோடு 101. இவர்கள் பூஜையில் ஷோடசோப சாரம், அர்க்யம் பாத்யம் முதல் தூப தீப நைவேத்யம் என்று உபசாரங்கள் உண்டு.

தவிர ஆறு அனு உபசாரங்கள் உண்டு. அவை முகவாஸம் ஏலக்காய் லவங்கம் தாம்பூலம் கண்ணாடி குடை சாமரம் பாதுகை முதலானவை. இன்றியமையாதவை எந்த பூஜையிலும் ஸ்நானம், மடிவஸ்த்ர தாரணம், புண்ட்ர தாரணம் அவஸ்யம். பேசாமலும் நடுவில் எழுந்துபோகாமலும் இருந்து பூஜை செய்யவேண்டும் என்பது சட்டம். எந்தபூஜையும் தூப தீப நைவேத்யங்களால் நிறைவு பெறும்.

## முடிவுரை

இரண்டு வருடங்களாக நமது பாட்டன் சொத்து எனும் பொருளில் பித்ரார்ஜிதம் எனும் தலைப்பில் ஸ்ரீகுடியேற்றம் க்ருஷ்ணமாச்சாரி அவர்கள் எழுதிய புத்தகத்தை மீண்டும் மீட்டுரு செய்துள்ளேன். ப்ரதீபத்தில் வரவேண்டுமென எண்ணி செய்தேன். இருந்தது ஒரு ப்ரதி. நமது சாஸ்த்ரங்களின் அமைப்பையும் தாத்பர்யங்களையும் அலசி கோவையாக அழகாக அவர் எழுதியிருந்தார். அதை வாசகர்கள் படிக்கவேண்டுமெனும் அவாவில் எழுதப்பட்டது. அப்பெருந்தகைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து
அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா

**பீஷ்மர் ந ரோசதே விக்ரஹோ மே பாண்டுபுத்ரை: கதன்சன**

**த்தைவ த்ருதராஷ் ட்ரே மே ததா பாண்டுரசம்சயம் ॥**

*பீஷ்மர் பாண்டவர்களுடன் விரோதம் எனக்குப் பிடித்தமில்லை. பாண்டுவும் அரசனும் எனக்கு சமமே.*

**மதுரேணைவ ராஜ்யஸ்ய தேஷாமர்தம் ப்ரதீயதாம்**
**ந சாபி தேஷாம் வீராணாம் ஜீவதாம் குரு நந்தன**
**பித்ர்யோம்ச: சக்ய ஆதாதுமபி வஜ்ரப்ருதா ஸ்வயம் ॥**

*அன்புடன் அவர்களுக்கு பாதி ராஜ்யம் கொடுங்கள். அது அவர்களது உரிமை. பித்ரார்ஜிதமானதை இந்த்ரன் கூட எடுத்துக் கொள்ள முடியாது. .*

**த்ரோண: மமாப்யேஷா மதிஸ்தாத யா பீஷ்மஸ்ய மஹாத்மன: ॥**

*த்ரோணர், பீஷ்மர் எதைச்சொன்னாரோ அதுவே என் அபிப்ப்ராயம்*

**விதுர: ப்ரியம் ஹிதம் ச த்த்வாக்யமுக்தவான் குருஸத்தம:**

**பீஷ்மோ த்ரோணேன பஹுதா பாஷிதம் ஹிதமுத்தமம் ॥**

*விதுரர் ப்ரியமானதையும் ஹிதமானதையும் உத்தமமானதையையும் இருவரும் கூறினார்கள்.*

**ஏதத்தி பரமம் ஸ்ரேயோ மன்யேஹம் தவ பாரத**

*விதுரர் இதுவே சிறந்த வழி என்பது என் அபிப்ராயம்.*

**யச்சாப்யசக்யதாம் தேஷாமாஹது:புருஷர்ஷபௌ**

**தத்ததா புருஷவ்யாக்ர யத: க்ருஷ்ணஸ்ததோ ஜய: ॥**

*அந்த இரு மேதைகளின் கூற்றை நான் ஆமோதிக்கிறேன். மேலும் க்ருஷ்ணன் எங்கோ அங்கே ஜயம் என்றும் தெரிந்து கொள்ளவும்.*

**யச்ச ஸௌம்யேன சக்யேன கார்யம் ஸாதயிதும் ந்ருப**

**கோ தைவசப்தஸ்தஸ்த்த்கார்யம் விக்ரஹேண ஸமாசரேத் ॥**

*ஸமாதானத்தால் முடியக்கூடியவிதியினால் சபிக்கப்பட்ட கார்யத்தை எவன் போரினால் முடிப்பான்?*

**ஸ்ருத்வா ச ஜீவத;பார்தான் பௌரஜானபதா:ஜனா:**
**பலவத்தர்சனே ஹ்ருஷ்டா: தேஷாம் ராஜன் ப்ரியம் குரு ॥**

*பாண்டவர்கள் உயிருடன் இருப்பது மக்களுக்குத் தெரிந்துவிட்டது, அவர்களைப் பார்க்க ஆவலுடன் இருக்கிறார்கள். அவர்களை மகிழ்வியுங்கள்.*

**துர்யோதனச்ச கர்ணச்ச சகுனிச்சாபி ஸௌபல:**
**அதர்மயுக்தா துஷ்ப்ரஞ்யா பாலா மைஷாம் வச; க்ருதா: ॥**

*துர்யோதனனும் கர்ணனும் சகுனியும் அதர்மம் செய்பவர்கள், பாலர்கள். அவர்கள் சொல்வதை கேட்க வேண்டாம்.*

*த்ருதராஷ் ட்ர:*

**திஷ்ட்யா ஜீவந்தி தே பார்தா திஷ்ட்யாஜீவதி ஸா ப்ருதா**
**திஷ்ட்யா த்ருபகன்யாம் ச லப்தவந்தோ மஹாரதா:**
**த்வமேவ கத்வா விதுர தான் ஹி ஆனய மா சிரம் ॥**

*விதுரனே அதிர்ஷ்டம் அதிர்ஷ்டம் பாண்டவர்கள் உயிருடனிருப்பது. அவர்கள் மணம் முடித்தனர் என்பதும் மகிழ்ச்சியே. குந்தி உயிருடனிருப்பதும் அதிர்ஷ்டமே. காலதாமதம் செய்யாமல் அவர்களை இங்கு அழைத்து வா.*

**ஏவமுக்தஸ்தத: க்ஷத்தா ரதமாருஹ்ய சீக்ரம்**
**ஆகாத கதிபயாஹோபி: பாஞ்சாலான் ராஜதர்மவித் ॥**

*இப்படி சொல்லப்பட்டபின் விதுரர் ரதத்தில் ஏறி சில நாட்களில் பாஞ்சாலத்தை அடைந்தார்.*

**ததர்ச பாண்டவான் தத்ர வாஸுதேவம் ச (பாரத)**
**வசனாத் த்ருதராஷ்ட் ரஸ்ய பப்ரச்ச அனாமயம் தத:**

*அங்கு வாஸுதேவரையும் பாண்டவர்களையும் கண்டபின் அரசரின் சார்பாக நலம் விசாரித்தார்.*

**ததஸ்தே ஸமனுஞ்யாதா த்ருபதேன மஹாத்மனா**
**ஆதாய த்ரௌபதீம் ஜக்முர் நகரம் நாகஸாஹ்வயம் ॥**

*த்ருபதனிடமிருந்து விடைபெற்றுக்கொண்டபின் த்ரௌபதியுடன் அவர்கள் ஹஸ்தினாபுரம் சென்றனர்.* *(தொடரும்)*

# ஸ்ரீ ஜயதேவரும் அவர் அருளிச் செய்த கீத கோவிந்தமும்

## பாகம்-2

*15. என்ன ஆச்சர்யம்! அவர் முதலில் எழுதியவாறே அந்த நீக்கிய வரிகள் எழுதப்பட்டு இருந்ததைப் பார்த்து, வியந்து தன் மனைவியிடம் விசாரிக்கும் போது அவர் மனைவி 'நீங்கள்தானே சற்று முன் வந்து எழுதிவிட்டு சாப்பிட்டு விட்டு வெளியே சென்றீர்கள்' என்று சொன்னார். ஸ்ரீ ஜயதேவரும் பத்மாவதி தேவியும் அப்போதுதான் உணர்ந்தார்கள். பூரி ஸ்ரீ ஜகன்நாதரே ஸ்ரீ ஜயதேவர் ரூபத்தில் வந்து அந்த வரிகளை எழுதினார் என்றும் பத்மாவதி தேவி கையால் உணவும் அருந்திச் சென்றார் என்றும் அறிந்து ஆனந்த பாஷ்யம் பெருக மெய்மறந்தனர். இது ஒன்றே போதுமே 'கீதகோவிந்தம் ஒரு தெய்வீக காவ்யம்' என்பதற்கு பகவானால் எழுதப்பட்ட அந்த தெய்வீக வரிகளைப் பார்ப்போம். 'ஸ்மரகரல கண்டனம் மம ஸிரஸி மண்டலம் தேஹி பத பல்லவமுதாரம் ஜ்வலதி மயி தாருணோ மதனகதநாருணோ ஹரது ததுபாஹித விகாரம் ப்ரியே சாருசீலே முஞ்ச மயி மானமநிதானம்.' வஞ்சிகுறமகள் பாதம் வருடிய மணவாளா என்று அருணகிரிநாதர் தன் திருப்புகழில் முருகனைப் போற்றி எழுதிய வரிகள் ஞாபகத்திற்கு வருகிறது.*

*16. மேலும் இந்த அஷ்டபதி மரணத்திலிருந்து மீட்டு உயிரளிக்கும் ம்ருத சஞ்ஜீவினி மந்திரமாகவும் பயன்படுத்தப்பட்டு இருக்கிறது என்பது கீழ்கண்ட சம்பவத்திலிருந்து அறிகிறோம். ஒரு சமயம் பத்மாவதி தேவி கஜபதிராஜா அரண்மனையில் மஹாராணியுடன் பேசிக் கொண்டிருந்தார். அச்சமயம் ராணி விளையாட்டாக பத்மாவதி தேவியிடம் ஸ்ரீ ஜயதேவர், ஸ்ரீ ஜகன்நாதர் ஆலயத்தில் த்யானத்தில் இருந்த போது உயிர் நீத்தார் என்று சொல்ல அதைக் கேட்ட பத்மாவதி தாயார் துக்கம் தாங்காமல் அந்த க்ஷணமே தானும் உயிர் நீந்தார். விளையாட்டு விபரீதமானதைப் பார்த்த ராணி மிகவும் வருந்தினாள். ராஜாவும் உடனே ஸ்ரீ ஜயதேவரிடம் சென்று நடந்ததைக் கூறி வருந்தி மன்னிப்புக் கேட்டார். ஸ்ரீ ஜயதேவர் துளியும் கவலைப்படாது உடனே பத்மாவதி தேவியின் உடலுக்கருகில் சென்று ஸ்ரீ ஜகன்நாதரை மனதால் வேண்டி அஷ்டபதி 19ல் உள்ள 'ப்ரியே சாருசீலே முஞ்ச மயி மானமநிதானம்' என்ற வரிகளை இசை மீட்டிப் பாடினார். உடனே பத்மாவதி தேவியார் தூக்கத்திலிருந்து எழுதுவது போல உயிர்பெற்றெழுந்து ஸ்ரீ ஜயதேவருடன் சேர்ந்து இந்த அஷ்டபதியை இசை மீட்டிப்பாடி ஸ்ரீ ஜகந்நாதரை துதித்தார்கள் என்று சொல்லப்படுகிறது.*

*17. 'ரதிஸுக ஸாரே' எனத் தொடங்கும் 11 வது அஷ்டபதியில் விப்ரலம்ப ஸ்ருங்காரத்தை கவி வர்ணிக்கிறார். கிருஷ்ணன் யமுனா நதிக்கரையில் ராதையின் வருகையை எதிர்நோக்கி*

ஆவலுடன் காத்திருக்கிறான். 5வது சரணத்தில் கிருஷ்ணராதையின் ஆனந்த ஆலிங்கனத்தை கார்மேகத்தினிடையே தோன்றும் மின்னலாகவும், கருமேகங்களிடையே பறந்து செல்லும் நாரைக் கூட்டங்களாகவும் வர்ணித்துள்ள அழகு, கவியின் மஹா கவித்துவத்தை பறைசாற்றுகிறது.

18. பச்யதி திஸி திஸி எனத் தொடங்கும் 12வத அஷ்டபதியில் தன்னிடத்தை விட்டு துளியும் அகலாது மனம் கண்ணனையே நினைத்து அவன் பிரிவாற்றாமையை சஹிக்க இயலாது. அவன் வரவை எதிர் நோக்கி விரஹதாபத்தினால் வேதனையுறும் ராதையைக் கண்ணுற்று தோழி. ராதையின் நிலைமையை கண்ணனிடம் கூறுவதை விளக்கியுள்ள அழகே தனி.

19. கீதகோவிந்தனின் பெருமையை விளக்க மேலும் ஒரு ருசிகரமான நிகழ்ச்சி. ஒரு இலந்தைப்பழம் விற்கும் ஒரு வயதான மூதாட்டி காட்டிற்குள் சென்று முட்கள் அடர்ந்த மரங்களிலிருந்து இலந்தைப்பழம் திரட்டச் சென்றபோது பக்திப் பரவசத்துடன் தன் இனிமையான குரலில் கீதகோவிந்தப் பாடல்களைப் பாடினாள். அந்த இசையில் மயங்கித் தன் ஆலயம்விட்டு ஸ்ரீ ஜகன்நாத கிருஷ்ணர் அக்கிழவியைப் பின் தொடர்ந்தார். அங்குள்ள முட்கள் அவருடைய ஆடைகளைத் துண்டு துண்டாகக் கிழித்தது. மறுநாள் அர்ச்சகர்கள் பூட்டிக் கிடந்த கோயிலுக்குள் சென்று பார்க்கையில் ஸ்ரீ ஜகன்நாதரின் ஆடைகள் முட்களால் கிழிக்கப்பட்டிருந்ததைக் கண்டு என்ன காரணம் என்று அறிய முடியாமல் அதிர்ச்சியுற்றனர். அவர்கள் கனவில் ஸ்ரீ ஜகன்நாதர் தோன்றி நடந்த நிகழ்ச்சியை கூறினார் என்று கீதகோவிந்தத்தின் பெருமையைக் கூறுகின்றனர்.

20. தினமும் ஸ்ரீ ஜகன்நாதரின் ஸன்நிதானத்தில் கீதகோவிந்தப் பாடல்கள் பக்கவாத்யங்களுடன் பாடப் பெற்று நடன மாதர்களால் நாட்யமும் ஆடப்பட்டு பகவானுக்கு நித்ய ஸேவையாகச் சமர்ப்பிக்கப்படுகிறது.

21. இவருடைய புகழிலும், கீதகோவிந்தத்திலும் பிராபல்யத்தைக் கண்டு பொறாமை கொண்ட மஹாராஜா கஜபதி தானும் கீதகோவிந்தத்தின் மையக் கருத்தின் அடிப்படையில் பாடல்களை எழுதி அப்பாடல்களையே பாடகர்கள் சங்கீதத்துடன் ஸ்ரீ ஜகன்நாதரின் ஸந்நிதியில் பாடவேண்டும் என்றும், கீதகோவிந்தப் பாடல்களை பாடக்கூடாது என்றும் கட்டளை இட்டான்.

(தொடரும்)

# விபூதியின் மகத்துவம்

## மஹாலக்ஷ்மி தேவி ஐந்து இடங்களில் வாசம் செய்கிறாள்:-

*(1) யானையின் தலைப்பாகத்தில், (2) பசுவின் பின்புறத்தில், (3) உத்தம ஸ்திரீகளின் நெற்றியில், (4) தாமரை மலரில், (5) பில்வதளத்தில்.*

ஒவ்வொரு பசுவின் உடலிலும் எல்லாத் தேவதைகளும் குடிகொண்டிருக்கிறார்கள். அந்தப் பசுவின் சாணத்திலிருந்தே ஐச்வரியத்தை அளிக்கும் விபூதி செய்ய வேண்டும். பூமி முதலான வஸ்துக்களைச் சுத்தம் செய்வதற்குக்கூடப் பசுவின் சாணம் உபயோகிப்பது சிறந்தது. விபூதிக்கு ஐச்வர்யம் என்று மற்றொரு பெயரும் உண்டு. பஸ்மோபநிஷத்தில், 'பசுவின் சாணத்தில் செய்த விபூதியை அணிந்துகொண்டால் மறுபிறவி இல்லை' என்று கூறியிருக்கிறது. விபூதியைத் தரையில் சிந்தினால் கொடிய நரகத்தில் விழுவார்கள் என்று சொல்லியிருக்கிறது. 63 நாயன்மார்களில் ஒருவர் போர் செய்த பொழுது விபூதி அணிந்திருந்ததைக் கண்டு அவரைக் கொல்ல வந்தவர் பின்வாங்கினார் என்று சரித்திரத்தில் கூறியிருக்கிறது. பிரம்மதேவன் மனிதன் பிறக்கும்போதே அவன் அநுபவிக்க வேண்டிய இன்ப துன்பங்களை நெற்றியில் எழுதுகிறார் என்று சாஸ்திரம் கூறுகிறது. அப்படி எழுதப்பட்ட துன்பங்களைப் போக்க விபூதியை அணிந்து கொள்ள வேண்டும். எழுதப்பட்ட துன்பங்கள் கீழே இருப்பதனாலும், விபூதியை நெற்றியில் அதன்மேல் அணிவதனாலும் துன்பம் மேலே வராது. ஆகையால் நாம் இன்பமாக வாழலாம். பரமேச்வரர் வெண்மை நிறமுள்ளவர். விபூதியை அணிந்துகொள்வதனால் பரமேச்வரரின் தியானம் நமக்கு உண்டாகிறது.

உலகில் எந்தப் பொருளும் நெருப்பில் அல்லது தீயில் போட்டால் வெளுப்பாகப் பஸ்மமாகிறது. ஆகையால் ஒவ்வொரு பொருளும் இதே மாதிரி பஸ்மமாகிறது என்று விபூதி உணர்த்துகிறது. ராக துவேஷங்களைப் போக்கி முடிவில் எல்லாம் பஸ்மமாகிறது. பரமேச்வரனுக்கு அநேகப் பெயர்கள் உண்டு. அதில் பரமேச்வரன் என்ற பெயர் எப்படி வந்ததென்றால் ஐச்வரியரூபமான விபூதியைத் தேகம் முழுவதும் அணிந்ததனால் பரமேச்வரன் என்ற பெயர் உண்டாயிற்று. இந்தப் பஸ்ம தாரணம் சிவபக்தர்கள் மாத்திரமே அணிந்து கொள்ள வேண்டுமென்று இல்லை. ஐச்வரியம் கோருபவர்கள் யாவரும் அணியலாம். ஸ்ரீ மீனாட்சி வீற்றிருக்கும் மதுராபுரியில் கூன்பாண்டியன் என்ற அரசனுக்கு வயிற்றுவலி வந்தபோது திருஞான சம்பந்தர் விபூதியை மந்திரித்து வயிற்றின் மேல் தடவியதால் வயிற்றுவலி குறைந்தது. மேலே தடவினதும் வலி நீங்கியது; உள்ளுக்குச் சாப்பிட்டால் எல்லா நோய்களும் எத்தனையோ ஜன்மங்களில் செய்த பாவங்களும் நீங்கி மனத்துக்குச் சாந்தியைக் கொடுக்கும். ஒவ்வொரு நாளும் தலைக்கு ஸ்நானம் செய்ய வேண்டும். செய்ய முடியாதவர்கள் இந்தப் பஸ்மத்தைத் தலையிலிந்து கால்வரை அணிந்து கொண்டால் ஸர்வஸ்நான சுத்திபலம் கிடைக்கும்.

பஸ்மம் தரிப்பவர்களுக்குக் கிருமிகளினால் தொல்லை வராது. இந்த பஸ்மத்தினுடைய பலிதங்கள் அநேகம். இதை அணிந்து அநுபவித்தால் இதனுடைய பெருமை தெரியவரும்.

# கஷ்டமே வராமலிருக்க வழி

மனிதனுக்கு அவசியமாக வேண்டியவை மூன்று வகைப் பொருள்களே. பசியைப் போக்கிக்கொள்ள ஆகாரம் வேண்டும். பின்பு வெயில், குளிர் இவைகளைத் தடுத்துக் கொள்வதற்கும் மானம் காப்பதற்கும் வஸ்திரம் வேண்டும். களைப்புத் தீர இருப்பதற்கு ஆச்ரயம்-இடம் வேண்டும். இந்த அவசியமான பொருள்களுக்கு மேல் அவன் சேகரிக்கும் பொருள் யாவும் குழந்தைகளை ரக்ஷிக்கவும் அவர்களின் விவாஹம் முதலியவற்றிற்கும் உபயோகமாக இருக்கின்றன. தன்பால் ஒப்படைக்கப்பட்டிருக்கிற வேறு சில ஆத்மாக்களுடைய அவசியப் பொருள்களையும் அவன் ஸம்பாதித்துத் தருகின்றான். நித்ய வியாதியாகிய பசிக்கு ஆஹாரம் ஸம்பாதித்துத் தானும் உண்டு பிறருக்கும் தருகிறான். பசியை வியாதியாகவும் சாப்பாட்டை மருந்தாகவும் சொல்வதில் ஒரு விசேஷமிருக்கிறது. ஸ்ரீ ஆச்சார்யர்கள் ஸாதன பஞ்சகத்தில் 'க்ஷுத்வ்யாதிஸ்ச சிகித்ஸ்ய தாம்-பசியென்ம் வியாதிக்கு வைத்யம் பண்ணிக்கொள்' கட்டளையிடுகிறார்கள். வியாதியுடையவன், வியாதி நிவ்ருத்திக்கு எவ்வளவு மருந்து அவசியமோ அவ்வளவுதான் சாப்பிடுவான். நாக்குக்கு ருசியான மருந்தைத்தேடிச் சாப்பிட்டுக் கொண்டே இருக்கமாட்டான். தவிர அதிக விலை கொடுக்காமல் குறைந்த விலையுள்ள மருந்து கிடைக்குமானால் அதையே வாங்கிச் சாப்பிடுவான். அதுபோலத்தான் தேவையுள்ள அளவுக்குச் சாப்பாடு அகப்பட்டால் போதும் என்பதே அதன் கருத்து.

இப்படி மனிதன் தனக்காகச் செய்து கொள்ளவேண்டிய பல காரியங்களையும், தன்னைச் சேர்ந்தவர்களுக்காகச் செய்யவேண்டிய காரியங்களையும் தவிர வேறு பல விசித்திரமான காரியங்களையும் செய்துவருகின்றான். அந்த அதிகப்படியான வேலைகளில் சிலவற்றைக் கவனிப்போம். ஒருவன் சிலுவை என்று என்று ஒன்றை வைத்து சர்ச்(church) என்ற ஓர் இடத்தைக் கட்டிக் கொள்கிறான். அங்கே இவனுடைய பசியைப் போக்கக்கூடிய பதார்த்தம் ஒன்றுமே கிடையாது. மற்றொருவன் ருத்ராக்ஷம் அணிந்துகொண்டு நிறைய விபூதியைப் பூசிக்கொள்கிறான். இவையெல்லாம் முன்சொன்ன அவசியமான காரியங்களில் சேரா. இவற்றால் வயிற்றுக்கும் பிரயோஜனமில்லை; வஸ்திரத்திற்கும் பிரயோஜனமில்லை; இவை அதிகப்படியான காரியங்களே. ஏதே பஞ்சபாத்திரத்தையும் உத்தரணியையும் எடுத்துக்கொண்டு சப்தம் பண்ணுகிறான். வாயால் முணுமுணுக்கிறான். ச்ராத்தம் என்று ஒன்றும் செய்கிறான். பிராம்மணர்களைக்கூட்டி வைத்துச்சாப்பாடு போடுகிறான். இவற்றால் அவனுடைய பசி நீங்குமா? வயலுக்கு மழை பெய்து ஜலம் பாயுமா? ஒன்றுமில்லை. ஒருவன் மலைகளிலிருந்து கல்லை எடுத்துவந்து கோவில் கட்டுகிறான். அதுவோ அவனுக்குத்

தங்குவதற்குக் கூடப் பிரயோஜனப்படுவதில்லை. ராத்திரியில் பூட்டிவிடுகிறார்கள். மழையில் ஒண்டுவதற்குக்கூட இடமில்லாமல் மதில்சுவர் எழுப்பிவிடுகிறார்கள். சிலபேர்கள் மதம் மதம் என்று சொல்லிக்கொண்டு என்னென்ன காரியங்களோ செய்கிறார்கள். சில பேர் இதிலேயே மதத்திற்காகச் சண்டை போட்டுக் கொள்கிறார்கள். சில ஊரில் பஜனைமடம் என்று ஸ்தாபித்து, தொண்டைக்கும் சரீரத்திற்கும் ஓயாத தொல்லையைத் தேடிக் கொள்கிறார்கள். இதற்கும் ஆபீஸ் வேலைக்கும் ஸம்பந்தமே கிடையாது. இவையெல்லாம் பார்க்கும்போது மனிதனுக்கு அவசியமல்லாத அதிகப்படியான காரியங்களாகத் தோன்றுகின்றனல்லவா?

இவை அனாவசியந்தானா? ஏன் இவற்றைச் செய்ய வேண்டும்? இவற்றால் வரும் பிரயோஜனமென்ன?

மனிதன் ரூபாயை ஸம்பாதிப்பானேன்? தினந்தோறும் பசியை ஆற்றிக்கொண்டாலே போதுமே! எங்கேயாவது போய்ச் சாதம் கேட்டால் போடுகிறார்கள்: சத்திரங்களிலும் சாப்பிடலாம். சாப்பாடுதான் கிடைக்கிறதே, சம்பளம் எதற்கு என்று ஒருவனும் நினைப்பதில்லை. ஒருவர் சாதமும், ஒரு படி அரிசியும், ஐநூறு ரூபாய்ப் பணமும் தனித்தனியே வைத்து இவைகளுக்குள் ஏதாவது ஒன்றை எடுத்துக்கொள் என்று சொன்னால் பணத்தைத்தான் ஒருவன் எடுத்துக்கொள்வான். ஏன்? சாதம்தானே வேண்டும்? பணம் எதற்காக என்றால், சாதம் ஒரு வேளைக்குத்தான் பிரயோஜனப்படும்; அரிசி இரண்டு வேளைக்கு வரும். பணமோவென்றால் பத்து வேளைக்கு உதவும். அதிக நாளைக்குப் பிரயோஜனமாகக்கூடிய பொருளைத்தான் அவன் அதிகமாக விரும்புகிறான்.

பள்ளிக்கூடம் போகிற பையனுக்குத் தாயார் சாதம் கட்டித் தருகிறாள். அது ஒரு வேளைக்கு வேண்டியதே. கொஞ்சம் தூரமான ஊருக்குப் போவதாயிருந்தால் அசிதி முதலிய சாமான்களைக் கட்டிக் கொண்டு போகிறோம். முன் காலத்தில் ரெயில் கிடையாது. நினைத்த மாத்திரத்தில் போய்விட்டு வரவேண்டிய சௌகரியங்கள் இல்லை. ஆனால் இந்தச் சௌகரியங்களினால் நமக்கு நஷ்டந்தான் அதிகமாக ஏற்படுகிறது. ரெயில் சார்ஜ், சாப்பாட்டுச் செலவு, பஸ், காப்பி முதலிய செலவுகள், புது ஸாமான்கள் வாங்குவதில் செலவு, இப்படி அநேக செலவுகள் ஏற்படுகின்றன. பழங்காலத்திலோ எவ்வளவு நாள் வெளியூர்ப் பிரயாணம் செய்கிறோமோ அவ்வளவு நாள் வீட்டுச் சாப்பாடு லாபம். நடப்பதால் காலுக்குப் பலம். அந்தக் காலத்திலும் 50 மைல் தூரம் உள்ள ஓரிடத்திற்குப் போக அரிசி கட்டிக்கொண்டு போனார்கள். பிரயாணதூரம் அதிகப்பட அதிகப்பட நாம் சேகரித்து வைத்துக்கொள்ளவேண்டிய

பொருள்களும் அதிகப்படுகின்றன. ஒருநாள் சாப்பிட்டால் போதுமே; மறுநாள் சாப்பாட்டிற்கு இப்பொழுதே என்ன கவலை என்றிருப்பதில்லை. மறுநாள் அஸௌக்கியம் வந்துவிட்டால் கஷ்டப்பட வேண்டுமேயென்று நாளைக்கும் சேர்த்து இன்றைக்கே சேகரித்துக் கொள்கிறோம்.

மறுநாள் ஸௌக்கியத்தைக் கவனிக்காவிட்டால் பணம் நமக்கு வேண்டாம். இப்படி முன்பே பிற்காலத்துக்கு வேண்டியவற்றைச் சேகரித்து வைக்கிறதில் பின்பு எவ்வளவு நாள் ஸௌக்கியமாக இருக்கவேண்டுமென்று எண்ணுகிறோம்? ஒரு மாதமா? ஒரு வருஷமா? எவ்வளவு சேர்த்து வைக்கிறோம்? ஆயிரமா? பதினாயிரமா? இன்னும் எவ்வளவு இருந்தாலும் நம் ஸௌக்கியத்துக்கு அநுகூலமே. நாம் இன்னும் எவ்வளவு நாள் ஸௌக்கியமாக வாழ வேண்டுமென்பது எல்லோருக்கும் தெரியாது. ஈச்வரன் எழுதி வைத்திருக்கும் நாள்தான் அதற்கு எல்லை. ஆனால் நாம் எப்பொழுதும் ஸௌக்கியமாகவே இருக்க விரும்புகிறோம், இந்தப் பணம் முதலிய உபகரணங்கள், முன் சொன்ன எல்லைக்குப் பின்பும் எப்பொழுதும் ஸௌக்கியமாகயிருக்கப் போதுமா?

இவை உடம்பு உள்ளவரைக்கும்தான் உதவும். அப்புறம் இவற்றால் பிரயோஜனமில்லை. நாம் எப்பொழுதும் சாவதில்லை. உடம்புதான் சாகிறது. ஆகையால் எப்பொழுதும் ஸௌக்கியமாக இருக்க ஒரு காரியத்தை இப்பொழுதே செய்தாகவேண்டும். செத்த பின்பு கை-கால்களில்லை. பிற்காலத்திற்காக இப்பொழுதே இன்ஷ்யூர் செய்வதைப்போல் இப்பொழுதே இந்தக் காரியங்களைச் செய்ய வேண்டும்.

நாம் ஒரு மலையடிவாரத்திலிருக்கிறோம். நம்முடைய கையில் ஆயிரம் ரூபாய்ப் பணம் இருக்கிறது. அவ்வளவும் சில்லறையாக இருக்கிறது. அப்பொழுது திருடர்கள் வருகிறார்கள். பலமான கலகம் நடக்கும்போலிருக்கிறது. மலைமேல் ஏறி அப்புறம் போய்விட்டால் நமக்குப் பயமே இல்லை. அப்பொழுது ஒருவன் நம்முன் தோன்றி ஆயிரம் ரூபாய்க்கும் நோட்டு வேண்டுமா என்று கேட்டால் நாம் என்ன செய்வோம்? உடனே அவனிடம் சில்லறை மூட்டையைத் தள்ளிவிட்டு ஆயிரம் ரூபாய்க்கும் நோட்டாக மாற்றிக் கொண்டு துள்ளிக்குதித்து மலையேறி ஓடிப்போய்விடுவோம். ஆனால் அந்த நோட்டுகள் மலைக்கு அப்புறமுள்ள தேசத்தில் செல்லும் நோட்டுகளாக இருத்தல் வேண்டும். அதைப்போலத்தான் இப்பொழுது நம்முடைய கதையுமிருக்கிறது. நமக்குள்ள சக்தியைக் கொண்டு பிற்காலத்துக்கும் உபயோகமான காரியங்களைச் செய்து கொண்டால் நமக்குக் கஷ்டமே வராது.